
www.tamilarangam.net



www.tamilarangam.net






அனைத்துவித
திரிபுவாதங்களுக்கும்
எதிராக சமர்.
இது ஒரு மக்கள் பத்திரிகை



## உள்ளே


| | |
|---|---|
| இந்துமத பாசிசம் | பக் - 12 |
| சரிநிகருக்குள் மார்க்சிச விரோதிகள் | பக் - 18 |
| ஏற்றத் தாழ்வைப் போற் | பக் - 26 |
| கலாவின் கவிதை | பக் - 38 |
| கேள்வி - பதில் | பக் - 53 |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

23 வது

# இலக்கியச்சந்திப்பு

## பிரான்ஸ்

**மாற்று இலக்கியம் என்ற பெயரில் ஏகாதிபத்தியசக்திகளை நக்கவிரும்பும் இந்த இலக்கிய ஆர்வலர்கள் புலம்பெயர் சமூகத்தின் எதிரிகளாவர்.**



செப்ரெம்பர் 13,14ம் திகதிகளில் பிரான்ஸ் - சார்சேலில் ஐரேப்பாவின் 23வது இலக்கியச்சந்திப்புத் தொடர் நடைபெற்றது.

பல்வேறு விடயங்களைக் கொண்டிருந்த இச்சந்திப்பானது குறைந்தபட்ச முதலாளித்துவ ஜனநாயக எல்லையைக் கூட பேண முடியாது சீரழிந்தது மட்டுமன்றி ஏகாதிபத்தியத்திற்கும், அராஜக வன் முறைக்கும் சார்பான குரலையே வெளிப் படுத்தியது.

புலம்பெயர் சூழலில், மாற்றுகள் தாம் தான் என மார்தட்டிக் கொண்ட முன்னைய பம்மாத்துகள் கூட சிதறி, முன்பு இயக்கங்களை சில புத்திஜீவி கள் எப்படி சிதைத்தனரோ அதையே இங்கும் செய்ய அதற்கு வக்காலத்து வாங்கவும் ஆதரிக்கவும் இச்சந்திப்பு பின்நிற்க வில்லை. மக்கள் மீது நேசம் கொண்ட சில அப்பாவிகள், இதை மாற்றி விடமுடியும் என நம்பி, நாய் வாலை நிமிர்த்த முனைவது போல எவ்வளவு தான் முயன்ற கீச்சிட்ட குரல்களும் கேட்க முடியாதவாறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள்விரோத ஒட்டுண்ணிகளின் ஏகாதிபத்திய கூச்சல்களுக் கிடையில் அமுங்கிப்போயின.


சொந்தநாட்டில், அடுத்த வேளை உணவின்றி, வீடுவாசல் இன்றி, ஷெல்மழைகளுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும் சகலதையும் இழந்து எம்மக்கள் வாழும் நிலையில், புலம்பெயர் நாட்டில் நாசி வன்முறை, அரசின் திட்டமிட்ட புறக்கணிப்புகள், எம்மவரின் அனாவசியமான ஆடம்பரங்கள், சிறுவர்களின் கலாச்சார நெருக்கடி என நீடித்த எமது மக்களின் அவலம், உலகமக்களின் வறுமை, அவலவாழ்வு இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாது கண்ணை மூடிக்கொண்டு பால்குடிக்கும் பூனை போல் வெறும்முதுகு சொறிதல்களையே இலக்கியச்சந்திப்பு என்றபெயரில் இக் கும்பல் நடத்திச்சென்றது.

சிங்கள மொழிபெயர்பாளர் ஒருவரும் இச்சந்திப்பில் பங்குபற்றி கருத்து வழங்கியமை அடிப்படையில் ஒரு முற்போக்கு அம்சமே. ஆனால், இவர் என்ன செய்தார்? காமினிவியாங்கொட என்ற இந்நபர் தான் மொழிபெயர்த்த நாவலுக்கூடாக ஓர் ஏகாதிபத்திய பிரச்சாரத்தையே நடாத்த சபை ஆரவாரித்து கைதட்டி தனது வர்க்ககுணாம்சத்தை வெளிக்காட்டியது.

அவர் மேலும் கூறும்போது சோவியத் சிதைவுக்குப் பின் ஏகாதிபத்தியம் மாயமாய் மறைந்துவிட்டதெனவும், ஏகாதிபத்தியம் என்பது இப்போது அறவே இல்லாத நிலையில் ஏகாதிபத்தியம் என்க் கூறுவது மோசடியானது எனவும் கூறுகிறார்.
இதைக்கேட்டு மூன்றாம் உலக மாற்றுத் தள புலம்பெயர்தமிழ் இலக்கிய குஞ்சுகள் தமது ஏகாதிபத்திய சார்பு விசுவாசத்தைக்காட்ட நன்றி தெரிவித்து கைதட்டி ஆர்ப்பரித்தனர்.

ஒரு கட்டத்தில் தான் சிங்களத்திற்கு மொழி பெயர்த்த நாவல்பற்றிய விளக்கத்தில் தேசியக் கொடி என்பது எதுவுமற்ற ஒன்று தான் என உரத்து பிரகடனம் செய்தபோதும் சபை எதுவித எதிர்ப்புமின்றி கைதட்டி வரவேற்றது. தேசியம் என்ன கற்பிதமானதா? தேசியக் கொடி ஒன்றுமில்லாததா? இதன் மூலம் தமிழ்மக்களின், உலக மக்களின் ஜனநாயக உரிமையை மறுக்கின்றனர். இது ஒருவகையில் சிங்கள இனவாதத்திற்கும் சார்பானதே. உலகமயமாதலை முன்னெடுக்கும் ஏகாதிபத்தியங்கள் தேசியம், தேசியக் கொடியை ஒன்றுமில்லாததாக காட்ட, மாற்ற முனைகின்றனர். அதற்கு எதிரான அனைத்து ஜனநாயகப் போராட்டமும் நசுக்கப்படுகிறது. இதுதான் தமீழப் போராட்டமும். இதை ஏகாதிபத்திய பொருளாதார அமைப்பில் ஒன்றுமில்லாததாககூறுவது அதை பாதுகாக்க செய்யும் முயற்சியே. சிங்களப் பகுதிகளில் சாதி ஒடுக்குமுறை பற்றி எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போது அங்குசாதி ஒடுக்குமுறை - சாதி-அமைப்பு முறையே பெருமளவில் இல்லை என தனது மேல்வர்க்க சாதி நிலைப்பாட்டினை வெளிப்படுத்தினார்.

ஏகாதிபத்தியம் முன்வைத்த தலித் அரசியலை முன்னெடுக்கும் தலித்ததுக்கள் என அண்மைக்காலமாக அழுது-புலம்பித்திரியும் நபர்களோ அவர்களின் ஆதாரபுருஷர்களோ கூட இக்கருத்தினை கைதட்டி ஆதரித்தது நகைப்பிற்கிடமாக இருந்தது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏகாதிபத்திய எலும்பை நக்கித்திரியும் காமினிவியாங்கொட, பாட்டாளி வர்க்கத்தை நாயாக உருவகப்படுத்திய போதும் சபை வாழ்த்தியது. மாற்று இலக்கியம் என்ற பெயரில் ஏகாதிபத்திய சக்திகளை நக்கிப்பிழைக்க விரும்பும் இந்த இலக்கிய ஆர்வலர்கள் புலம் பெயர்சமூகத்தின் கேடுகெட்ட எதிரிகளாவர்.

இனி, சந்திப்பில் நோர்வேயிலிருந்து வந்து கலந்து கொண்ட பிழைப்புவாதி வ.ஐ.ச. ஜெயபாலன் என்ற கவிஞனின் சந்தர்ப்பவாதத்தைப் பார்ப்போம்.

அண்மையில் நாடுசென்று, புலித்தலைவர்களைச் சந்தித்துத்திரும்பியவன், தள நிலைமைகளைக் கண்ணால் கண்டவன். எனவே என்னை மறுக்கும் தகுதி உங்களுக்கு இல்லை என உணர்ச்சிவசப்பட்ட நிலையில் மீளமீள பிரகடனம் செய்து கொண்டார் கவிஞர்.

புலிகள் திருந்திவிட்டனர், புலிகளில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. எனவே நாம் புலிகளிடம் ஜனநாயக அம்சங்களை கோரியபடி புலிகளை ஆதரிக்க முன்வர வேண்டும் என வெண்தாமரை இயக்கத்தினை கடுமையாக விமர்சித்தபடி செந்தாமரை இயக்கமொன்றினையும் புலிகளுக்காகதொடங்கி வைத்தார்.

தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டம், மிக நெருக்கடியான இன அழிவின் விளிம்பில் தத்தளிக்கிறது. இந்த அழிவுக்கான முழுப்பொறுப்பும் புலிகளையே சாரும் என்ற வரலாற்று உண்மையையும் போராட்டத்தில் இறந்து போன ஆயிரக்கணக்கான இளைஞர்களின் உண்மையான தியாகங்களும், விடுதலைக் கனவுகளும் சிதைந்து போகுமோ என்ற அளவுக்கு இன்று தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டமானது இராணுவவாதத்துக்குள் சிக்கித் திணறுகிறது. இதிலிருந்து மீள்வதற்கான பாதை என்னஎன்பதே இன்று எம்முன் உள்ள கேள்வியே தவிர அதை மேலும் சிதைககும் பாதையில் ஒட்டிக்கொள்வதல்ல.

இது புலிகளை நோக்கி கோரும் ஜனநாயக உரிமையிலும், இன வாதிகளுக்கெதிராக போராடும் வழிகளிலும் தான் கட்டி அமைக்கப்படும்.

ஜனநாயகத்தைக்கோரி போராட விரும்பும் உண்மையான சக்திகளின் பல்வேறுகருத்துக்கள் புலிகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவது இயங்கியல். ஆனால் அது புலிகளில் மாற்றத்தை ஏற்படுத்தி விடாது. புலிகள் குறைந்த பட்சம் ஜனநாயக இயக்கமாக மாற வேண்டின் அம்மாற்றம் அரசியல்ரீதியாக நடக்கவேண்டும். அது திட்டவட்டமாக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வேலைத் திட்டத்தைத் தொடங்க வேண்டும். இது தான் புலிகளில் மாற்றம் என்று காட்ட ஏதாவது ஒரு முன்னெடுப்பாகும்.

இதனை புலிகள் செய்யாதவரை, புலிகளுக்குள் உள்நடக்கும் சில அசைவுகள், நிகழ்வுகள் அரசபயங்கரவாத நெருக்கடிகளின் பிரதிபலிப்பே தவிர வேறொன்றுமில்லை.

ஓர் இயக்கம் இதிலிருந்து மீளவும் மாறும். இதற்கு சந்திரிக்காவினதும், யு.என்.பி.யினதும் அமைப்புள் மாறி மாறி நடக்கின்ற சம்பவங்கள் புலிக்கும் பொருந்தும்.

சந்திரிகா ஒரு வெண்தாமரை இயக்கத்தை தொடங்கியதுபோல, புலிகளுக்காக ஜெயபாலன் ஒரு செந்தாமரை இயக்கத்தை தோற்றுவிக்க ஆசைப்படுகிறார். அவ்வளவுதான்.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக நடந்த விவாதத்ததில், தேசிய இனப் பிரச்சினைக்கும் தேசியவரையறைக்கும் ஸ்ராலின் வரைவைத்தவிர வேறெதுவும், வேறெந்தக் கோட்பாடும் இல்லை என நாவலன் வாதிட்டபோது துடித்தெழுந்த கவிஞர். ஜெயபாலனும், முதலாளித்துவ பெண்ணிலைவாதியுமான ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியமும் கொலைகாரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்ராலினை மீளக் கொண்டு வரும் முயற்சி என பலமாகக் கத்தினர்.

தேசிய இனப்பிரச்சினைக்கு ஸ்ராலினை விட மாற்றுக் கோட்பாட்டினை முன்வைக்கக் கோரிய போது தமது இருக்கையில் இருக்க முடியாதவாறு நெளிந்து முறுகி தமது இயலாமையைக் காட்டியபடி அதை எதிர்த்து ஏகாதிபத்திய சத்தியில் மொய்த்த கொசுவாக கீச்சலிட்டனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், ஏகாதிபத்தியசத்தியில் தோய்ந்தெழுந்து புலம்பிய ஜெயபாலன், ஸ்ராலினை கொலைகாரனாகவும், முஸ்லீம்களை வெளி யேற்றிய படுபாதகனாகவும் சித்தரித்து விட்டு பிரபாகரனையும், முஸ்லீம்களை வெளியேற்றிய புலி-களையும் ஆதரிக்கக்கோரிய முரண்பாடு அவரது சந்தர்ப்ப வாதத்தினை துல்லியமாக தோலுரித்தது நின்றது.

ஓர் இலக்கியச்சந்திப்பானது மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும். நடந்த 23 சந்திப்புக்கள் எதைச் சாதித்திருக் கின்றன எனக் கேட்கும்போது சந்திப்பாளர்களின் விழிபிதுங்குவதைக் காணலாம்.

மாற்றுக்கருத்துக்கு இடம் என்று கூறிக்கொள்ளும் இவர்கள் அடிப்படை யில் செய்வது பாட்டாளிவர்க்கத்திற்கு எதிரான பிரச்சாரக்களத்திற்கு வழி சமைப்பதே.

ஒரு முற்போக்கான இலக்கிச்சந்திப்பு குறைந்த பட்சம் கருத்தடிப்படையில் பாட்டாளிவர்க்க எதிர்ப்பல்லாத முதலா-ளித்துவ எல்லைக்குள்ளானது. திட்ட வட்டமாக ஏகாதிபத்திய எதிர்ப்பிருக்க வேண்டும். ஏகாதிபத்தியத்திற்கும் பாட்டாளிவர்க்கத்திற்கும் கருத்துச் சுதந்திரம் என்பது உண்மையில் பாட்டாளிவர்க்க எதிர்ப்பும் ஏகாதிபத்திய சார்புப்பிரச்சாரமும் ஒளிய வேறொன்று மல்ல.

தவறிழைக்கிறவர்கள் எல்லா மட்டத்திலும்தான் இருக்கிறார்கள். ஆனால், புத்திஜீவிகள் அல்லது புத்தி ஜீவிகள் என்று சொல்லிக் கொள்கி றவர்கள் தவறிழைப்பது சமூகத்தின் சாபக்கேடாகும்.

பிற்சேர்க்கை :

இலக்கியச்சந்திப்பில் கலந்து கொள்ள கட்டாயமாக இலங்கைப்பணத்திற்கு ஆயிரம் ரூபா வசூலிக்கப்பட்டது. இலவசமான மண்டபத்தில் சாப்பாடுகிறா ரோ இல்லையோ ஒரு மணிநேரம் தான் பங்குகொள்கிறாரோ இல்லையோ ஆயிரம் ரூபா கட்டாயமானது. இது பிரமுகர்களுக்கு மட்டும் விதிவிலக்கு. பணம் வாங்கி நடத்தும் இலக்கியமரபு, புலம்பெயர் திருமண, சாமத்திய சடங்குகளின் தொடர்ச்சியே ஒழிய வே-றொன்று மல்ல.

○





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யார் சுரண்டலை தொடர்வது..

## எனக்கோரி நடந்த பிரஞ்சு தேர்தல்



பிரஞ்சு தேர்தல் ஜனாதிபதியின் விருப்பை மீறியவகையில் முடிந்துள்ளது. ஜனாதிபதிக்கு சார்பான பாரளுமன்றத்தில் இருந்து அறுதிப் பெரும்பான்மை இன்னமும் ஒருவருட ஆளும் தகுதியை கொண்டு இருந்த நிலையில் காலம் செல்லச் செல்ல வெற்றி நிச்சயம் அற்ற தன்மை என்பது தேர்தலை வேகப்படுத்தியது.

இத்தேர்தல் முடிவுகள் யார்க்கும் பெரும்பான்மையின்றி ஒரு கூட்டணி ஆட்சி உருவாகியுள்ளது. தம்மை இடது சாரிகள் எனக் கூறிக் கொள்ளும் சோசலிசக் கட்சியும் பச்சைக்கட்சியும் கமினிச கட்சியும் ஆட்சியில் அமர்ந்து சுரண்டலை பாதுகாக்கவும் தொடரவும் சபதம் எடுத்துள்ளனர்.

மக்கள் இந்த வாக்களிப்பில் யார் எம்மை குறையச் சுரண்டுவார்கள் என்ற கனவுகள் மட்டுமே முன்னையவர்களைவிட இவர்களைத் தேர்ந்தெடுக்க முனைந்தனர். இவர்கள் சுரண்டுவதிலும் கொள்ளையடிப்பதிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை பலமுறை நிறுவியவர்கள். இவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள கம்யுனிசப் போலிகள் தமது வர்க்கப் போராட்டவரலாற்றை தொலைத்து நீண்ட பல வருடங்களாக முதலாளித்துவத்திற்கு சேவை செய்து வருகின்றனர். இங்கு இந்தத் தேர்தலை ஜனநாயகம் எனப்பீற்றும் இந்த சுரண்டும் கனவான்கள் எப்படி ஆட்சியை அமைக்கின்றனர் எனப் பார்ப்போம்.

பிரான்சில் 18 வயதுக்கு மேற்பட்டோரில் வாக்களிக்க பதிந்தோரில், சோசலிசக் கட்சி பெற்ற வாக்குவீதம் 16.5 வீதம் மட்டுமே. இன்று ஆட்சி அமைத்துள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டணி அரசு பெற்ற மொத்த வாக்கு வீதம் அண்ணளவாக25 வீதத்தைவிடக் குறைவாகும்.

இன்று ஆட்சி பீடம் ஏறியுள்ள அரசு வெறும் 25 வீத மக்களின் விருப்பத்தின் பெயரிலும் பொய்யான பல வாக்குறுதிகளின் பெயரிலும் ஆட்சிப் பீடம் ஏறியுள்ளது. இந்த 25 வீதத்தின் வெற்றியைத்தான் உன்னத மக்கள் ஜனநாயகம் எனக் கூறும் வெட்கக் கேடான பொய்யை கூறுவதன் மூலம் உண்மையாக்கி விட முனைகின்றனர். இருக்கும் 20 வீதம் அரசு சார்புதுறையை தனியார் மயமாக்க கோரும் உலக ஒழுங்குகள் இவ் அரசு தனியார்மயமாக்க மாட்டோம் என்ற பொய்பிரகடனங்களை வழங்கியுள்ளது.
உதாரணமாக மின்சாரத்துறையை தனியார்மயமாக்க கோரும் இன்றைய நிலையில் அதன் லாப கட்டமைப்பைப் பார்ப்போம்.

ஒரு மின்சார யுனிற்றில் உற்பத்தி செலவு இன்று 0.01 பிரஞ் சென்றிம் ஆகும். ஆனால் பாவனையாளர்களுக்கு ஒரு யுனிற் விற்பது 76 சென்றிக்கும் ஆகும். இதைவிட இதற்கு 21.5 வீத பாவனை வரியும் சேவைக்கட்டணமும் உண்டு. மக்கள் சேவைக்கட்டணம் பாவனை வரியை விடுத்து உற்பத்தியை விட இன்று அரசு பெறும் லாபத்தை ஒரு யுனிற்றுக்கு பார்ப்பின் 760 மடங்காகும்.இது மொத்தமாக பார்ப்பின் கிட்டத்தட்ட 1000 மடங்காகும்.

இன்று ஒரு யுனிற்றுக்கு 760 மடங்கு லாபம் தரும் ஒரு அரசுதுறையை தனியார் மயமாக்க கோரும் உலக வங்கியின் கோரிக்கையை ஒரு சிலருக்கு தாரைவார்த்துக் கொடுக்கும் ஓர் அங்கமே ஒழிய மக்களின் நலன்களின் பெயரில் அல்ல.

இன்று பிரான்ஸ் என்பது இனித் தேவையில்லை ஐரோப்பாவே எமக்கு வேண்டும் என்று தேர்தல் கூட்டத்தில் எழுப்பிய குரல்கள் அடிப்படையில் உலகமயமதாதலின் ஐரோப்பிய பங்கைத் தக்க வைக்க பிரஞ்சு பொருளாராரத்தைக் கைவிடத் தயாராகவுள்ளனர். இன்று ஐரோப்பாவில் எழுந்து வரும் தனித்தனிப் போராட்டமும் ஐரோப்பிய மயமாக்கலின் அடிப்படையை கேள்விக்குள்ளாக்கின்றது.

ஐரோப்பியலில் மலிவு கூலி, மலிவுற்பத்தி எங்கு உள்ளதோ, எங்கு தொழிலாளர்கள் வசதியாக சுரண்ட முடிகிறதோ , அங்கு உற்பத்தியை நகர்த்து மற்றதை மூடு என்ற கோசமும், எங்கு எதிர்ப்பு உள்ளதோ அதைவிடுத்து மற்றதை மூடு என்ற கோசமும், ஐரோப்பிய மயமாதலின் பெரும் பண்பாகவுள்ளது. இதற்கு எதிரான தேசியப் போராட்டம் எழுவது மட்டும் இன்றி ஐரோப்பிய பொது வேலைநேரம் பொது கூலி எனப்பலவற்றை கோரும் வகையில் கூட்டுப் போராட்டங்கள் நாள்தோறும் ஐரோப்பாவில் தொடர்கிறது. இந்த ஐரோப்பிய மயமாதலினை எதிர்ப்பதில் போலி கம்யுனிஸ்ட்கட்சியும் நாசிக்கட்சியும் தீவிரமாகவுள்ளது.

நாசிக்கட்சியின் வளர்ச்சி மட்டுமே இத்தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றி எனக்கூறும் அளவுக்கு வீறு கொண்டு எழுகின்றனர்.
வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிக்க அதிகரிக்க அவர்களின் செல்வாக்கு அதிகரிப்பதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இந்த வாக்களிப்பில் நாசிக் கட்சி பெற்ற சராசரியைவிட அதிகம் வாக்களித்தோர் யார் எனப் பார்போம்.

ஆண்கள் 18 வீதமும், 25 - 34 வயதுக்கு இடைப்பட்டோர் 19 வீதமும், முதலாளியின் முன்னணித்தலைவர்கள் 23 வீதமும், தொழிலாளர் 24 வீதமும், வேலையற்றோர் 22 வீதமும், தனியார் வேலைப்பிரிவு 19 வீதமும் , சராசரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டம் பெற்றோர் 20 வீதமும், என வாக்களிப்பு நாசிகளை நோக்கி சார்பாவுள்ளது. நாசிக்கட்சி பெற்ற 15 வீதத்தை விட இது அதிகமானது மட்டு மின்றி சமூக நெருக்கடி அதிகரிக்க அதிகரிக்க மேல் கீழ் என இரு பிரிவு நாசிகளுக்கு வாக்களிப்பதில் அதிகமாக ஈடுபடுகின்றனர்.

கம்யுனிசக்கட்சியிக் துரோகம் என்பது தொழிலாளர்களின் 14 வீதத்தையும் வேலையற்றோரின் 13 வீதத்தையும் அரசதுறையில் 13 வீதத்தையுமே பெற முடிந்தது. நாசிக்கட்சியுடன் ஒப்பிடும் போது இவர்களின் துரோகம் அடிப்படை வர்க்கம் இவர்களிடமிருந்து விலகிச்செல்வதையே காட்டுகிறது.

1974 இல் இந்த நாசிக்கட்சி பெற்ற வாக்குகள் 0.73 வீதமாகும். ஆனால் இன்று 15 வீதத்தைத் தனதாக்கியதுடன் பாராளுமன்றத்திற்கு முதல்முதலாக ஒரு பிரதிநிதியை அனுப்பியுள்ளது. அத்துடன் சட்டவிரோத பொலிஸ்படை அமைத்து பொலிஸ் உடையில் கூட சோதனையில் ஈடுபடுவது தெரிய வந்துள்ளது. இன்று பொலிஸ் மற்றும் போக்குவரத்துத் துறையில் இக்கட்சிக்கு 28 வீத ஆதரவுள்ளது மட்டுமின்றி பொலிஸ் பகிரங்கமாகவே நாசிசார்பாக செயல்படுவதுடன், வெளிநாட்டவரைப் துன்புறுத்திப் பழிவாங்குகிறது. இந்த நாசிக்கட்சித்தலைவர் லூபேன்



தேர்தலுக்கு முன் சோசலிசக் கட்சிப் பெண் வேட்பாளரைத் தாக்கியதன் மூலம் தனது பாசிசத்தை இனம் காட்டினார்.

இன்று மாறிச் செல்லும் நிறவாத பாசிச நிலையைத் தடுத்து நிறுத்த வேண்டின் அதற்கு எதிராக பாட்டாளி வர்க்க தலைமையில் போராடும் ஒரேயொரு பாதை மட்டும் எஞ்சியுள்ளது.

இன்று பிரான்சில் சிறுசிறு குழுக்களாக பல குழுக்கள் உருவாகியுள்ளதுடன், சில மா. லெ. மா சிந்தனை வழி செயல்பட முனைகின்றன. இத்தேர்தல் தீவிர இடதுசாரிப்பிரிவு 6 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளது. இதற்கு ரொக்ஸிய திரிபுவாதிகள் உள்ளடக்கிய இந்த மொத்த வாக்களர்களில் தான் எதிர்கால சரியான முன்னணி கட்சி தோன்றும் சாத்தியப்பாடுள்ளது. உலகில் உள்ள எல்லா நாடுகளும் அதில் வாழும் தேசிய முதலாளிகள் உள்ளிட்ட மக்கள் பிரிவும் உலகமயமாதலை எதிர்த்து பன்னாட்டு நிறுவனத்திற்கு எதிராக போராட தத்தம் வர்க்க நிலையில் முயலுகின்றன. அதை சரியாகப் புரிந்து அணிதிரட்டுவதன் மூலம் உலக மயமாதலுக்கு எதிரான போராட்டத்தை தேசியப் போராட்டங்களை வர்க்கப்போராட்டமாக முன்னெடுத்து வெல்ல முடியும். இதைத் தவறவிடின் இத்தேசியம் பாசிசத் தேசியமாக மாறும் இது உலகில் எல்லா மக்களினதும் எல்லா நாடுகளினதும் பிரச்சனையாகும். உலகமயமாதலை எதிர்த்த தேசியமும் உலகமயமாதலை எதிர்த்து வர்க்கப் போராட்டமும் ஒன்று இணையும் போது அது உலகப் புரட்சிக்கு ஒவ்வொரு நபரும் தயாராவை சுட்டிக்காட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரும்புத் திரையை

## உடைத்த ஜனநாயகம்

### மக்களின் வாழ்க்கையை

## சூறையாடுகிறது



Nikita Khrushchev
Culver Pictures, Inc.

புல்காரில் 2ஆம் உலக யுத்த முடிவில் அங்கு போராடிய கமினிஸ்ட்டுக்களும் அந்நாட்டை மீட்ட செம்படையும் இணைந்து சோசலிச அரசை நிறுவன. இந்த ஆரம்ப முயற்சியை 1950ன் இறுதியில் ஆட்சிக்கு வந்த குருசேவ் தடுத்து நிறுத்தியதுடன் முதலாளித்துவ மீட்சியை தொடங்கியதுடன் மக்களில் இருந்து அந்நியப்பட சர்வாதிகாரத்தை கொம்மியுனிசத்தின் பெயரால் நிறுவிக் கொண்டனர்.

இந்த முதலாளித்தவ மீட்சி உள்ளுக்குள் தேசிய முதலாளிகளை வளர்த்து எடுத்ததுடன் சமுக ஏகாதிபத்தியமான சோவியத் யூனியனுக்கு சார்பாக ஒரு திறந்த சந்தையாகவும், பனிப்போர் தளமாகவும் மாறியது. இந்த குறிப்பிட்ட சந்தையை உடைப்பதன் மூலம் மேற்கு நாடுகளால் வர்ணிக்கப்பட்ட இரும்புத் திரை தகர்ந்து போயின. தமக்குத் திறந்துவிட சந்தையை மெச்சும் அரசியல்தான் ஜனநாயகமாக அவர்கள் முன்னெடுக்கின்றனர்.

மறுபுறம் இந்த உடைந்த இரும்புத் திரை மக்களுக்கு எந்த விதமான ஜனநாயகத்தை வழங்கியுள்ளது என ஆராய்வோம். இன்று திடீர் என பொருட்களின் விலை 380 வீதத்தால் அதிகரிக்க வேலையினமை 20 வீதத்தால் அதிகரித்துள்ளது. பணவீக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. 1992 இல் 23 லிவாவாக இருந்த டொலர் 1993 இல் 45 லிவாகவும் 1994 இல் 95 இல் 75 லிவாகவும் 96 இல் 150 ஆகவும் 97 இல் 1000 லிவாகவும் திடீர் என அதிகரித்துள்ளது.கடந்த ஜனவரியல் 500



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லிவாவாக இருந்த டொலர் பெபிரவரி யில் 1000 லிவாவாக அதாவது இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இது ஒருபுறம் இருக்க ஓய்வு ஊதியம் பெறும் ஒருவனின் சம்பளளமாக 4000 லிவாக மதிப்பு (4 டொலர்) இழந்து போயுள்ள அதேநேரம் ஒரு தொழிலாளியின் சம்பளம் 20 000 லிவாவாக (20 டெ-ாலரால்) மாறியுள்ளது இதைக் கொண்டு பிச்சைக்கார வாழ்க்கையை வாழ்ந்த மக்களுக்கு அடுத்த அதிர்ச்சியாக மார்ச் மாதம் பொருட்களின் விலை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. ஒரு கிலோ கோப்பியின் விலை ஓர் ஓய்வூதியம் பெறுபவரின் சம்பளத்துக்கு சமனாக அதாவது 4000 லிவாவாக அதிகரித்துள்ளது. ஒரு கி-லோ மாட்டு இறைச்சி யின் விலை 2600 லிவாவாகவும் 700 கிராம் ரொட்டி விலை 155 லிவாகவும் அதிகரித்துள்ளது.

1994 இல் புல்காரின் கடன் 1047 கோடி டொலராக இருந்து இன்று எட்டாத கொப்பில் தொங்குகிறது. இரும்புத் திரை உடைத்து ஜனநாயத்தின் பெயரால் அந்நிய ஏகாதிபத்தியங்களும் உள்நாட்டு முதலாளிகளும் மக்களின் அற்ப சில்லறைகளைக்கூட கொள்ளையடித்துச் செல்லுகின்றனர். ஆட்சியிலுள்ள முன்னாள் கம்யூனிஸ கட்சிகளும் தமது நிறத்தை மாற்றி சோசலிசக் கட்சி என்ற பெயரால் சொள்ளையடிக்கின்றன. மக்கள் தமது கடந்த கால வெற்றிகளை மீளவென்றெடுக்க போலிகளை இனம் கண்டு வீதியில் இறங்குகின்றனர். அந்த மக்கள் மீளவும் போராடவும் புரட்சியின் தேவையையும் இனம் காண்கின்றனர். அந்த மண் மீண்டும் சிவக்கும் போலி-களை மீறி அந்த மக்களும் அந்த மண்ணும் மக்களின் வெற்றிக்காகப் போராடும் ஒரு சகாப்தத்தை தொடங்க தமது கைகளை உயர்த்த தொடங்கி விட்டனர். ◯


## வெளிவந்து விட்டது!

பிரசித்தி பெற்ற மார்க்சின் மூலதனம் (5 தொகுதிகள்) முதன் முதலாக தமிழில் வெளிவர உள்ளது. இதை பெற்றுக்கொள்ள விரும்புவோர் சமருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொகுதியின் விலை

**250 பிராங்குகள்**

மட்டுமே!
முந்துங்கள்




Karl Marx
Culver Pictures, Inc.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாசிச வெறியர்களுக்கு

## வக்காலத்து வாங்கும் தொழிலாளர்பாதையின் மார்க்சியம்

16.1.1996 தொழிலாளர்பாதையின் புரட்சி கம்யூனிஸக் கட்சி ( இவரகள் தமது பெயரை அண்மையில் சோசலிச சமத்துவக் கட்சி ) என மாற்றி மேலும் சீரழிக்கின்றனர். பாசிசபார்பானிய இந்து மத வெறியை நியாயப்படுத்திய மணிரத்தினத்துக்காக குரல் கொடுத்துள்ளனர்.

மணிரத்தினத்தின் வீட்டின் மீது குண்டுவீசிய சம்பவத்தைச் சுட்டிக் காட்டி கலை ஞன் பாதுகாககப்பட வேண்டும் என்று கூறி வரிக்குவரி முதலாளித்துவம் என ஒப்பாரி வைத்தபடி முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும்படி பாபர்மசூதி இடிக்கப் பட்டதை மறை முகதமாக நியாயப்படுத்தியுள்ளனர். அதை அவர்களின் கூற்றில் பார்ப்போம்.

" பொம்பே திரைப்படம் முதலாளித்தவ நரசிம்ராவ் ஆட்சியின் நானாவித கும்பல் களதும் இந்து முஸ்லீம் அடிப்படைவாத பிற்போக்கு கும்பலும் பெரும் வெறுப்புக்கு இலக்காகி உள்ளது.... தமது மதத்தைச்சார்ந்த யுவதி அதனை விட்டு இந்து மத இளைஞனைத் திருமணம் செய்வதைதச் சித்தரிக்கிறது இத்திரைப்படம்.
இவ்விடயம் மையக்கருவாளதையிட்டு முஸ்லீத் தீவிரவாதிகளைக் கொதிப்படைந்து போயிருக்கும் அதேவேளை சிவசேன தலைவர் பால்தாக்கருக்கு சமமான ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாத்திரத்தினை திரைப்படம் கொண்டுள்ளதாகக் கூறி அவரும் சிவ-சேனனின் பிரபல தீவிரவாதிகளும் மணிரத்தினத்தையிட்டு வெறுப்படைந்து போயிருந்தனர்.""

என இட்டுக்கட்டிய ஒரு பொய்யை புரட்சிகரகம்யூனிசத்தின் பெயரால் பிரச்சனை யின் மையக்கருவைத் திசை திரும்பி பார்பன இந்து வெறிக்கு ஆதரவாக மணிரத் தினம் வழியில் நிய-ாயபப்டுத்தியுள்னர். இந்தப் போலி புரட்சிகரத்தை புரிந்து கொள்ள சிவ-சேன முக்கிய புள்ளி பால்தாகட்கரே 31.4.95 "ரைம்ஸ் ஒவ் இந்தியா" வுக்கு வழங்கிய பேட்டியைப் பார்ப்போம்:-

"" மணிரத்தினத்தின் பம்பாய் மிகசிறந்த படம் . நான் படத்தைப்பார்த்தேன். சில மாற்றங்களை மட்டும் செய்யச் சொன்னேன், அவ்வளவுதான். பம்பாய் கல-வரத்துக்காகாக நான் வருந்துவது போல் ஒரு காட்சி வருகிறது. அது உண்மை யல்ல. நான் எதற்காகவும் வருந்த வில்லை. கலவரத்தை சிலசேன ஆரம் பிக்கவில்லை நாங்கள் பதிலடிதான் கொடுத்தோம். ( மற்றப்படி ) இது மணி ரத்தினம் உருவாக்கியுள்ள அற்புதமான படம். படத்தை நான் வெகுவாக ரசித்தேன்."

பால்தக்ரேயின் இக்கூற்று புரட்சிகர கம்யுனிஸ கட்சியின் போலிப் புரட்சியை யும் பொய்மையையும் அம்பலப்படுத்து கின்றது. இது மட்டுமல்ல அண்மையில் மணிரத்தினத்திற்கு தாக்கரே சிறப்பு விருது வழங்கி கௌரவித்துள்ளார். மணிரத்தினம் இந்து வெறித்தனத்தை மறைக்க தக்ரே வருந்துவது போல் காட்ட அதை நிராகரித்து தக்கரே அதை நியாயப்படுத்தியுள்ளார். ஆனால் மணிரத்தினம் என்ற பாாப்பனன் அதைப் பூசிமெழுகி சாதாரண மக்க ளுக்கு இந்து வெறியூட்டி



சாதாரண முஸ்லீம் மக்கள் மீது மதவெறியூட்டியதே பம்பாய் என்ற திரைப்படம்செய்த புரட்சிகர காரியம். நரசிம்ராவ் அதன் கும்பலும் இத்திரைப் படத்தையிட்டு ஒருபோதும் ஒப்பாரி வைத்ததில்லை. மாறாக இப்படத்தை பாராட்டி இப்படத் தை திரையிட எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டன. அவர்களின் பாசிச இந்து வெறித்தனத் தை அழகாக மூடிமறைத்து பம்பாய் சினிமா நியாயப்படுத்தியதுக்கு காங்கி ரஸ்கும்பல் மணிரத்தினம் என்ற பார்ப்பனனுக்கு கடமைப்பாட்டைச் செலுத்தியது.

இந்து தீவிரவாதிகள் படம் திரையிடத் தடையாக இருந்தார்கள் என்பது அப்பட்டமான பொய். அதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. திரைபடம் ஓடிய போது அவர்கள்தான் முன்வரிசையில் இருந்து விசிலடித்தபடி பெண்ணின் மார்பை மணிரத்தினம் காமரா மூலம் திரையில் கொண்டு வந்தபோது ஆணாதிக்க வர்க்கத்துடன் இந்து மதவெறிபாசிசத்தை உள்வாங்கினர்.

இப்படத்தைத் தடை செய்யக்கோரி அப்பாவி முஸ்லீம் மக்களும் புரட்சிகரமக்கள் பிரிவு ஆர்ப்பாட்டம் செய்தனர். சில முஸ்லீம் தீவிரவாத பிரிவுகளும் பயன்படுத்தின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்கள் தமது எதிர்ப்பபைத் தனிநபர் பயங்கரவாத வழிகளில் வெளிப்படுத்தினர். இது அரசியல் விமர்சனத்திற் குட்பட்டதேயொழிய பார்ப்பனியபாசிச மதவெறியை புரட்சியின் பெயரால் மகுடம் சூடுவதல்ல.

பம்பாயில் நடந்த உண்மைச் சம்பவத்தைத் திரித்த மணிரத்தினத்தின் பார்ப்பன சார்பைக் கண்டு இயல்பாகச் சினந்தெழுவது யதார்த்தமானது. ஆனால் புரட்சியின் பெயரால் தொழிலாளர் பாதை சம்பவத்தைத் திரித்து முஸ்லீம் பெண் இந்து ஆணுடன் சென்றாள் என்ற மையக் கருத்துத்தான் முஸ்லீம் மக்களின் எதிர்ப்புக்கு காரணம் என காதில் பூ வைக்கின்றனர். பம்பாய் கலவரத்துக்கு முன் பாபர்மசூதி உடைத்து நொருக்கப்பட, இந்து பார்பானிய சதியும்: பம்பாயில் இந்து - பார்பானியம் தொடங்கி வைத்த முஸ்லீம் எதிர்ப்பு கரவரத்தையும் மூடிமறைத்து, இந்து வெறி ஊட்டியதே பம்பாயின் கருவாகும். முஸ்லீம் பெண்ணுக்குப் பதில் இந்துப் பெண்ணாக இருந்திருப்பின் தக்கரே கூட அனுமதித்திருக்க மாட்டார். ஆனால் வரிக்கு வரி முதலாளித்துவம் பேசும் தொழிலாளர் பாதை பார்ப்பன பாசிச இந்து வெறியை நியாயப்படுத்த கலைஞன் என்ற முகமூடி தேவைப்படுகிறது. அதைப் புரட்சிகர கம்யூனிஸக் கட்சி எப்படி கூறுகிறது என்று பார்ப்போம்.

““ஒரு கலைப்படைப்பின் கலைத்திறன் அல்லது குறைநிறை என்னவாக இருப்பினும் ஒரு கலைஞனைத் தாம் விரும்பிய விதத்தில் சுதந்திரமான முறையில் தமது படைப்பினை வெளிக் கொணரும் சக்தியும் உரிமையையும் பற்றிய பிரச்சனை. அதைக் காட்டிலும் பெரிதும் முக்கியமானதாகும்.” எனத் தமது அரசியல் வழியைத் தெளிவாக்கியுள்ளனர். இதில் என்ன கலைஞனுக்கு மட்டும் விதிவிலக்கு? முதலாளிக்கும் தானே. இது தெரியவில்லையா புரட்சிக் கம்யூனிஸக் கட்டசியே!?

கலைஞன் வானத்திலிருந்து வந்தவனா? இப்படி எல்லாப் பிரிவு மக்களுக்கும் இந்த வகையில் தமது துறையில் சுதந்திரம் இருக்கவேண்டும் அல்லவா? ஒரு முதலாளிக்கு தான் முதலாளியாக இருக்கும் உரிமையுண்டு அல்லவா? தொழிலாளர் பாதைக்குப் புரிகிறதா? நீங்கள் எதை நியாயப்படுத்துகின்றீர்கள் என்பதை?

கலைஞனின் கருத்துச்சுதந்திரம் என்பது என்ன? அதன் பொருள்முதல் பார்வை என்ன? திறந்த மார்பைவெளிக்காட்டும் ஒரு பெண்ணின் கலைத்திறன் திறந்த மேனியில் வெளிக்காட்டும் கலைத்திறன், சிறந்த மசாலாதிரைப்படக் கலைத்திறன், முதலாளித்துவ , நிலப்பிரபுத்துவ வாழ்வை நியாயப்படுத்தும் கலைத்திறன், கிட்லரின் பாசிசத்தை நியாயப்படுத்தும் கலைத்திறன் என அனைத்துக்கும் கருத்து சுதந்திரம் கோரும் புரட்சிகர கம்யூனிஸக் கட்சியின் புரட்சிகர ஏமாற்றை நாம் இனம் கண்டு கொள்ள வேண்டும். இவர்கள் தொழிலாளர்கள் எனபது வெறும வெற்று வார்த்தையே. உண்மையிலே இவர்களின் கனவுகள் முதலாளித்துவ கனவுகளே!

கலை முதல் எல்லா செயல்பாடுகளும் உழைக்கும் மக்களைச் சார்ந்து இருக்க வேண்டும். இல்லாமல் உழைக்காத பிரிவை நியாயப்படுத்தும் அனைத்து கலைக்கும் சுதந்திரம் என்பது ஏகாதிபத்தியத்தின் போலி ஜனநாயகத்தை மறைமுகமாக தொழிலாளர் என்ற பெயரால் நியாயப்படுத்துவதேயாகும். தொழிலாளர் பாதையின் அரசியல் எது என்பதை , அவர்களின் மேற்கோள்கள் மிகத் தெளிவாக அம்பலப்படுத்துகிறது. இதை நாம் சரியாக இனம் கண்டு கொள்வதன் மூலம் அவர்களின் போலி புரட்சிகர தன்மைகளை இனம் கண்டு வேறறுக்க முன் வர வேண்டும். ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திட்டமிட்ட பொருளாதார



## கொள்கையில் கூட திட்டமிட்ட தமிழின ஒடுக்குமுறை

இலங்கையில் உலக வங்கியின் ஆதிக்கம் உள்ளுர் தேசிய செல்வங்களை முடக்குவது அல்லது தனியார் ஆக்குவது என்ற அடிப்படைக் கொள்ளையாகும்.

இந்த வகையில் வாழைச்வேனையிலிருந்த காகிதத் தொழிற்சாலை மூடப்படும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. இங்கு தொழில்பரியும் 1350 தமிழ், முஸ்லீம் ஊழியர்கள் தமது வேலையை இழக்கும் அபாயத்திலுள்ளனர்.

தமிழ்பகுதியிலிருந்த மூன்று முக்கிய பெரிய தொழிற்சாலைகளான பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, சீமெந்து தொழிற்சாலை என்பன மூடப்பட்ட நிலையிலும் இறுதியில் வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையை மூடிவிட இனவாத சிங்கள அரசு முயல்கின்றது.

40 வருட பழமைவாய்ந்த இந்த தொழிற்சாலையை திட்டமிட்ட இனவாத சூழ்ச்சியில் கடந்தகாலம் நலினப்படுத்தப்பட்டதுடன் அங்கிருந்த பழைய இயந்திரங்களின் மூலம் ஊழியர்களின் சொந்த முயற்சியில் உச்ச உற்பத்தியைப் பெற்று வந்தனர்.

இந்த தொழிற்சாலையைக் கொண்டு கிடைக்கப்பெற்ற வருமானத்தில் கட்டப்பட்ட எம்பிலிபிட்டிய காகித ஆலை நட்டத்தில் இயங்கிய காலத்திலும் வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை கைகொடுத்துப் பாதுகாத்தது.

இன்று திறந்த பொருளாதாரக் கொள்ளையின் ஒரு வடிவமான உலகமயமாதலின் தொடர்ச்சியில் காகிதம் மீதான சுங்க தீர்வையை அரசு ரத்துச் செய்வதன் மூலம் வெளிநாட்டுக் காகிதம் மலிவு விலையில் வெள்ளமாக இலங்கைக்குள் பாய்கிறது.

இதனால் அரச நிறுவனம் உட்பட தனியார் நிறுவனங்கள் வாழைச்சேனைக் காகிதத்தை வாங்குவதை நிறுத்தியுள்ளது. இதனால் வாழைச்சேனைக்காகித ஆலையில் உற்பத்தியான 3500 தொன் காகிதம் தேங்கி பாதுகாக்க வசதியின்றியுள்ளதுடன், மீள் உற்பத்தியாக சேமித்த காகிதமும் தேங்கத் தொடங்கியுள்ளது. மீள் உற்பத்தியைத் தடுக்குமாயின் அல்லது வெளிநாட்டு உற்பத்திக்கு மலிவு விலையில் செல்லுமாயின் இதைச் சேகரிக்கும் வறுமையிலுள்ள குடும்பங்கள் மேலும் பட்டினிச் சாவுக்கு நகர்த்தப்படுவர்.

இன்று உலகவங்கியன் கட்டளையை நிறைவு செய்ய அதுவும் அதைத் தமிழ்பகுதியில் நடத்திவிட இனவாத அரசு தனது சிங்கள மேலாதிக்க நிலையில் நின்று செயல்படுகிறது.

இன்று இலயங்கையில் தேவை தமிழ் சிங்கள் மக்கள் இணைந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமாகும். இதைவிடுத்து தமிழ்பகுதி என கண் மூடின் மறுபுறம் இருப்பதை இழப்பதற்கு முதல்காலடி எடுத்து வைப்பதாக இருக்கும். ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திரிபுவாதிகளுக்கு

## பாய் விரிக்கும், மூடி மறைக்கும்

# சரிநிகர்





சரிநிகர் 114 இல் (ஜனவரி 23 பெப் 05 1997)இதழில் ""சரிநிகர் போற்றுவது இல்லை""எனத் தலைப்பிட்டு அ.மார்க்ஸ், சத்யா என இருவர் பெயர் போட்டு ஒரு செய்தி வெளியாகியிருந்தது. இதை எடுத்த எடுப்பில் பார்த்தால் யார் எழுதியது என்ற குழப்பமே வாசகர்களுக்கு எஞ்சும்.

கட்டுரையை வாசிக்கும் போதே அ.மார்க்சை மறைமுகத் தலைப்பிட்டு அறிமுகம் செய்யும் நோக்கில் அதன் ஆதரவாகக் சத்தியா செயற்பட்டுள்ளது புரியும்.

இச் செய்தியில் மறைத்த விடயத்தைச் சுட்டிக்காட்டி நாம் எழுதிய விமர்சனத்தை வழக்கம் போல் குப்பைக்குள் வீசிவிட்டது சரிநிகர். இனி அவர்கள் என்ன கூறமுற்படுகிறார்கள் எனப் பார்ப்போம்.

நவஉலக செய்திகளை தமிழில் கொண்டு வந்து தமிழில் பரப்பும் ஒரு மேதை எனப் பாராட்டும் சத்யா, இலங்கை இந்தியாவில் நவினத்தின் ஒரு நிழலும் இல்லாத உலக ஒழுங்கைப் பற்றிக் கதைக்கத் தயாரில்லை. 90 வீதமான மக்கள் கிராமப்புற சேரி வாழ்க்கையிலும் பட்டினியிலும் வாழ்கின்றனர். 10 வீதமான மேட்டுக்குடியின் சீரழிவை எடுத்து பின் நவினத்துவம் என கூறி அ. மார்க்ஸ் போன்றோர் ஏகாதிபத்தியக் கனவைப்பூர்த்தி செய்ய கோட்பாட்டு வடிவம் கொடுக்கின்றனர்.

இது ஒரு புறம் இருக்க சத்யா மேலும் அ.மார்க்ஸினதும் அவரின் நிறப்பிரிகைப் பத்திரிகைக் குழுவினரும் தீவிர நிலைப்பாட்டை எடுத்ததாகக் கூறிப் பாராட்டுகிறார்.

1994 ஆம் ஆண்டு 'இந்தியா ருடே'யின் சிறப்புமலரின் பார்ப்பனத்திமிரைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்டித்து நிறப்பிரிகை ஆசரியர் குழு இந்தியா ருடேயைக் கிழித்து மலம் துடைத்து இந்தியா ருடேயிற்கே அனுப்பினர். நல்ல நடவடிக்கைதான். இதைத்தான் சரிநிகர் 114 -ல்- இனை வாசிக்கும் ஒரு வாசகன் நம்புவான். ஆனால் இன்னும் ஓர் உண்மையை சத்தியாவும் சரிநிகரும் திட்டமிட்டு மறைத்துவிட்டனர்.

1995 ஆம் ஆண்டு அதே இந்திய பார்ப்பன சிறப்பு மலருக்கு அந்தோனிசாமி மார்க்சின் வலது கரமும் நிறப்பிரிகை ஆசிரியருமான ரவிக்குமார் கதை எழுதி வெளிவந்த கதையை சதியா உட்பட சரிநிகர் மறைத்துவிட்டது. அ.மார்க்சின் கலகம் என்பது மோசடியாகும். தமக்கான பங்கை கோரிய கலகமே தவிர கொள்கை கிடையாது. இது சத்யா கூறுவது போல எமக்கு ""தன்னடக்கமான்ன வார்த்தை யல்ல"" கோபத்திற்குரிய கணைகளாகும். இதைமூடிமறைத்து சத்யா, சரிநிகர் ஆசிரியர் குழுவும் தேவைதான் உங்களுக்கு சரிசமன் என்ற பெயரில் ""சரிநிகர் "" என்ற ஒரு பத்திரிகை . வாழ்க நடுநிலைமை தவறாத பக்கச்சார்பு செம்மல்களின் இலவச மூடிமறைத்த பொய் விளம்பரங்கள்.

இதைவிட இந்த நிறப்பிரிகை குழுவினரின் வேறுசில மோசடிகளைப் பார்ப்போம்.

ஈழத்துக்கவிஞர் செல்வி எழுதிய கவிதைக்கு சர்வதேச விருது ஒன்று கிடைத்ததை நாம் எல்லோரும் அறிந்ததல்லவா. அந்த நேரம் அந்தக் கவிஞர் புலிகளின் வதை முகாமில் சிக்கி இதுவரை வெளிவரவில்லை.
(இந்த விருது கிடைத்த நேரம் பாலசிங்கம் இவர் குறித்து விசாரணை முடிய விடிவிப்பதாக அறிவித்தும் இருந்தார்)

இந்த பெண் கவிஞரை விடக் கோரி மனித உரிமையை மதிக்க கோரியும் அந்தோனிசாமி. மார்க்ஸ் உட்பட பலர் கையெழுத்திட்டு ஓர் அறிக்கையை பகிரங்கமாக வெளியிட்டது நாம் எல்லோரும் அறிவோம். இந்த அந்தோனிசாமி . இரகசியமாக பாரிஸ் வந்த போது இதைப் புரட்சியின் கலகமாகக் கருதிய நண்பர்கள் அதைப்பாராட்ட திடுகிட்டு அ.மார்கஸ் எனது விருப்பம் இன்றியே எனது பெயரைப் போட்டு விட்டார்கள் என்றார். அ.மார்க்ஸ் புலியின் தயவை நாடியதைத் தொடர்ந்து செல்வியின் கைது ஜனநாயகம் எனக் நினைக்கின்றார் போலும் கேட்டுப்பாருங்கள் அ,மார்க்சையும் நிறப்பிரிகை பத்திரிகைக் குழுவையும்.

அடுத்த கதையைப் பார்ப்போம். அண்மையில் பாரிசில் நாதன், கஜன் படுகொலையைக் கண்டித்து நிறப்பிரிகைக் குழுவும் வேறு பலரும் சேர்ந்து கண்டன அறிக்கை விடுத்து பிரஞ்சுத் தூதுவராலயத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர். நல்ல விடயம். மக்கள் மீது சவாரி செய்வதே கொலைகாரரின் நோக்கம் என்பதால் அது தெளிவாகக் கண்டிக்கப்ட வேண்டும் என்பது எல்லா ஜனநாயகவாதிகளினதும் விருப்பமாகும். இதேநேரம் இதே பாரிசில் அ,மார்க்ஸ் அவர்களின் ஐரோப்பிய விஜயத்தின் போது கொல்லப்பட்ட சபாலிங்கம் கொலை பற்றி ஏன் இவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

அ,மார்க்சின் பாரிஸ் விஜயம் இதற்குள் முழுமை பெற்று சுருங்கிய மன உழைச்சலைக் கூட புத்தகம் கொண்டு வரவில்லை ஏன்?

சபாலிங்கம் கொலையின் போதும் சரி கஜன் நாதன் கொலையின் போதும் சரி சபாலிங்கம் பற்றிக் கதைக்காத அரசியல் தான் என்ன, அ,மார்க்ஸ் என்ற புரட்சி எழுத்தாளரே ?

இவர்களுடன் கூட்டு அரசியல் நடத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எஸ் வி பற்றி பார்ப்போம்.
அண்மையில் ஐரோப்பிய விஜயம் செய்த தீவிர அரசியல் விமர்சகர் எஸ்வி நான் அரசியல் கதைக்க மாட்டேன் ஏன் எனில் அரசியல் கதைப்பின் ஜனநாயகம் . . எனக் கேள்வி எழும் . தனது சந்தர்ப்பத்தை அரசியல் பிழைப்புக்கு வேட்டு வைத்து விடும் என்பதால் அரசியல் கதைக்க மாட்டேன். புரிகிறதல்லவா, இவர்களின் பம்மாத்து அரசியல்.

---



# சரிநிகருக்கு ள் மார்க்சிய விரோதிகள்

## எதை எப்படி திணிக்க முனைகின்றனர் எனப் பார்ப்போம்-

சரிநிகர் 124 இல் திட்டமிட்ட மார்க்சிய விரோத கோட்பாட்டை வெளிப்படுத்தும் மூன்று செய்திக் கட்டுரைகள் வெளிவந்திருந்தன. தலித்தியக் குறிபுக்கள், பின் நவீனத்துவமும் பின் காலனித்துவமும், சிலபுதிய புத்தகங்கள் என்ற வெவ்வேறு தலைப்புகளில் வெளியாகிய செய்திக்ள மட்டுமின்றி அண்மைக்காலமாக சரிநிகரில் அதிகளவு மார்க்சிய விரோதக்கருத்துக்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இதில் ஒன்றைப்பின்னோக்கிப் பார்க்கின்றபோது சரிநிகரில் நடந்த வேலை நிறுத்தத்தின் பின் புதிய ஆசிரியர் குழு ஒன்றை ஏற்படுத்திய நோக்கம் வர்க்கவிடுதலைக்கு எதிராக செயல் தளத்தை இலங்கையில், அதுவும் தமிழில் செய்ய முனைந்ததையே இது காட்டுகிறது.

இதற்கு ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்டு அதன் நிதி உதவியினால் இயங்கிவரும் 'மேர்ச்' என்ற நிறுவனத்தினூடாக வெளிவரும் சரிநிகரில் என்ன அரசியலை வெளிப்படுத்த வேண்டும் என்பதையும் அண்மைய சரிநிகர் பத்திரிகைகள் வெளிக்காட்டுகின்றன.

"" நாம் பின் நவீனத்துவமும் "" கட்டுரை வேறுஒரு விமர்சனக்கட்டுரையில் அடுத்த சமரில் ஆய்வுக்குட்படுத்த்யுள்ளோம். மற்றைய இரு கட்டுரைகளையும் பார்ப்போம். "தலித் என்ற பெயரில் அணிதிரள்வது முற்போக்கானது சமூகவிடுதலைக்கு அவசியமானது. உயர்சாதியை எதிர்க்க உதவுகின்றது" எனப் பலவாக தலித்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பில் " அருந்ததியன்" குறிப்பிடுகிறார்.

இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் ஏகாதிபத்திய எடுபிடிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட "" தலித்தியத்"" தைத்தான் இன்று மார்க்சியவிரோதிகள் உயிர்மூச்சாக உயர்த்திப்பிடிக்கிறார்கள். தலித்தியவரலாறும் அதன் உருவாக்கமும் ஏகாதிபத்திய கிறிஸ்தவ நிறுவனங் களால் அமெரிக்க கருப்பின மக்களுக் குள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது என்பதும் தலித்திய வரலாறாகும்.

தலித் என்பது தனக்குள் சாதி ஒடுக்கு முறையை பேணியபடி ஒடுக்கப்பட்ட மக்களாக அணிதிரள முயன்றவர்களை பிளவுகளை ஏற்படுத்த உருவாக்கப்பட்ட சமூகப்பிளவே தலித்தியம். தலித்தியம் மூலம் எப்படி விடுதலையடைய முடியும் அதன் கோட்பாடு என்ன? அதிலுள்ள முரண்பாட்டுப்பிரிவின் அரசியல் நிலை என்ன? எதுவும் அற்ற சமூகமாற்றத்திற்கு அணிதிரள்வதைத் தடுக்க தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக ஒருவாக்கப்ட்ட அமைப்பே " தலித்" என்ற சவக்குழி.



Mahatma Gandhi
Culver Pictures, Inc.

தீண்டத்தகாதவர்ளை காந்தி என்ற சாதித் திமிர்பிடித்த உயர்சாதிக்காரன் 'அரிசனன்' என்று அழைத்து எப்படி இந்தியப்புரட்சியை தடுத்து தாழ்த்தப் பட்டவர்களை தனியாக அடையாளப்ப டுத்தி பிளவுபடுத்தி தடுத்தது போல், இன்று உலகமயமாக்கத்திற்கு எதிரான புரட்சியைத் தடுக்க ஏகாதிபத்திய முன்வைப்புத்தான் தலித்தியம் என்ற இனிப்புத் தடவிய சாதி பேசும் சாதி அமைப்பு.

தலித்திளத்துக்குள் உள்ள சாதிப்பி ளவை கூட மாற்றமுடியாத இந்த தலித்தியம் சரி, ஒரு சாதியின் பெயரால் அமைப்பாகும் ஒரு சாதியும் சரி, இந்த சாதி அமைப்பைப் பேணுவதற்கும் அதன் மூலம் சில சலுகைகளை பெறுவதற்கும் அப்பால், இத்தலித்தியம் தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்றுக் கொள்ள எதையுமே பெற்றுக் கொடுக்காது. ஆனால் மார்க்சியவிரோதிகள் இதை முன்னெடுப்ப தன் மூலம் சாதியை ஒழிக்க முறை- யையும் ஒரு வர்க்கப்புரட்டசியைத் தடுப்ப தன் மூலம் தமது எஜமானர்களான ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்கின்றனர்.

உயர்சாதிக்காரன் சாதிசங்கம் வைத்திருந்தால் நான் ஏன் வைத்தி ருக்க முடியாது என்று கேட்பது, முஸ்லீம் அப்பாவி மக்களை ஈழத்தமிழ் இயக்கங்கள் கொல்லுவதால், ஏன் முஸ்லீம் ஊர்காவல்படையினர் தமிழரை கொல்லக்கூடாது என்று கேட்பதற்குச் சமனாகும்.

சமன்பாட்டிற்குள் சிக்கிக் கொண்டு சாதியை வேறு ஒரு வடிவில் பாதுகாப்பது என்பது உண்மையாக சமூக அக்கறை கொண்டவர்கள் வெட்கப்படவேண்டிய ஒன்றாகும் மாறாக சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் (வர்க்கமாக)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அணிதிரண்டு பதிலடி கொடுப்பதன் மூலம் தான், நாம் சாதியை கடந்து ஒரு பரந்து பட்ட விடுதலையை அடையமு-டியும். இதைவிடுத்து தலித்தாகவோ அல்லது ஏதோ ஒரு சாதியின் பெயரால் அணிதிரள்வது என்பது எப்படி ஒரு சாதியைக் கடந்து விடுதலை அடைய முடியும் என்ற ஒரு அற்ப கேள்வியைக் கூட கேட்கமுடியாத இந்த ஆய்வு அறி வாளிகளின் நோக்கத்தை நாம் அறி வற்றவர்களாக நின்றுதான் உயர்த்த முடியும். இதை உயர்த்தும் மற்றுமொரு பிரதிநிதிகளில் ஒருவர் "புதிய நல்லபுத்தகம் " என்ற தலைப்பில் சத்யா என்ற மாக்சிய விரோதியின் அறிமுகத்தைப் பார்ப்போம்.

அ. மாக்ஸ் , ரவிக்குமார் என்ற இந்திய திரிபுவாத மார்க்சியவிரோத ஏகாதிபத்திய கைக்கூலிகளின் புத்த கத்தையே நல்ல புத்தகம் என்று எமக்கு அறிமுகம் செய்கின்றார் சேற்றில் இறங்கி விட்டால் மலத்தைத்தான் உண்ண வேண்டும் இதற்கு சத்தியா என்ன விதி விலக்கா? இதில்விடியல் பதிப்பகம் பற்றியும் நல்ல புத்தகங்களை விடியல் பதிப்பகம் கொண்டுவருவதாகவும் கூறும் சத்யா, இந்த விடியல் பதிப்பகத்திற்கு எப்படி திடீர் எனப் பணம் வந்தது என்பதை காலம்தான் பதில் சொல்ல வேண்டும். எப்படி இந்த மார்க்சிச விரோதக் கும்பலின் வெளியீடுகளை மட்டும் வெளியிடுவதன் மர்மம் தான் என்ன? என்பதற்கு காலம் நிச்சயம் பதில் தரும். சத்யா கூறுவதைப்பார்ப்போம்.

"" அ. மார்கசும் ரவிக்குமாரும் எழுதி யும் மொழிபெயர்த்தும் வெளியிட்டுள்ள னர். ""தமிழகத்தின் தற்போதைய அசைவியக்கமாக தற்போது இவர்கள் தான் உள்ளார்கள். இவர்களைச் சுற்றி யும் இவர்களாலேயுமே வாதப்பிரதி வாதங்களால் எழுந்து ஓர் ஆரோக்கி யத்திற்கு இட்டுச் சென்று கொண்டிருக்கி றது. என்று அண்மையில் தமிழகம் சென்று வந்த ஒரு நண்பர் குறிப்பிட்டது குறிப்பிடத்தக்கது."" எனச் சத்யா சத்தியம் செய்கிறார்.

அசைவியக்கம் எங்கே இவர்களைச் சுற்றித்தான் என ஒப்புக் கொள்ளும் இவரே " மாங்காய் மடையன் போல்"" ஏதோ சாதித்துப் புரட்டுவதாக கதை திரித்து கதைவிடுவதும் கதைய ளப்பதும் இவர்களின் கைவந்த தொழில். இதே சத்யா முன்பு அ. மார்க்ஸ் அறிமுகத் செய்து கரடி விட்ட போது நாம் எழுதிய விமர்சனத்தை (சரிநிகர் குப்பையில் தேடி பார்க்கவும்) பார்த்தால் இவர்களின் சுயரூபம் எல்லோருக்கும் புரியும்.

இன்று தமிழ் நாட்டிலும் இந்தியாவி லும் எழுந்து வரும் வர்க்கப் போராட் டத்தை எப்படி சிதைக்கலாம் என, ஏகாதிபத்தியதிதின் கனவுகளில் சிக்கி யவர்கள் தான் இந்த அ.மார்கஸ் ரவிக்குமார் போன்ற பேர்வழிகள். இந்த குழுவுக்கு முடிவற்ற முரண்பாடுகளுடன் பெருத்த சில பெருச்சாளிகள் தமக்குள் தாம் கதைத்த பின் அதை அச்சிட கிடைத்த வாய்ப்பை பெற்று ஊருக்கு கூவி விற்கிறார்கள். பரந்து பட்ட மக்கள் ஆதரவு கொண்ட நடைமுறை பேராட்ட அமைப்புக்கள் தமது செய்திப் பத்திரிகையைக் கூட வெளிக் கொண்டு வர முடியாத நிலையில் இன்றைய இந்திய புரட்சிகர நிலையில், மக்களிடம் அந்நியப்பட்ட தமக்குள் பேசிக்கொள் ளும் ஒரு சிறு கும்பல், எப்படி அடுக்கடுக்காகப் புத்தகம் கொண்டு வரமுடிகிறது என்பதை புரட்சிகர நடைமுறையுடன் பாருங்கள் அப்போது புரியும் உங்களுக்கு.

மேற்கு நாட்டுக் கோட்பாடு சரக்குகளை நிராகரிப்போம் என்று உரத்த தொனியில் கூறியபடி, அது மார்க்சியமாக இனம் காட்டி பின் கடத்தல்காரர் போல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவசேகரம் தேடும் நடுநிலைக் கோட்பாடு பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரானது

பின்பக்கமாக மேக்கு நாட்டுச் சரக்கையே திரைக்குப் பின்னால் விற்பது போல மீள திரித்து புரட்டியும் விரிவாக்கியும் கடைவிரிக்கும் மர்மம், இந்த சரிநிகர் மாறிமாறி வெவ்வெறு பெயர்களில் எழுதும் எழுத்தாளர்



வல்லுனர்களுக்குப் புரியாது போனது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. இன்று இலங்கையில் பிழைக்கும் வழி என்ன தெரியுமா? புரட்சியைப் பற்றி , மார்க்சியத்தைப் பற்றி கேளாத கேள்வி கேட்டு அதை எதிர்த்துப் போராடினால் நல்ல வாழ்க்கை கிடைக்கும் , பிழைப்பு, புகழ் எல்லாம் கிடைக்கும் என்பது நடைமுறையான உண்மையாகும். அதுதான் இந்தகஷ்டப்பட்டு அறி-முகங்கள் பராட்டுக்கள் விளக்கங்கள் கூட்டங்கள் எனப் பிழைக்கும் வழியில் மக்களுக்கு எதிராகச் செயற்படும் நச்சுககாளான்களாக விதைத்தவர்க ளின் துணையுடன் எழுதும் தளத்தை யும் அதை செய்யும் வசதியையும் பெற்றுச் செயற்படுகின்றனர். என்பதை நாம் புரியத் தவறின் வரலாற்றில் மேலும் மக்கள் விரோதத் துரோகிகள் உருவாவதைத் தவிர்க்க முடியாது. இதை எதிர்த்து போராடுவது இன்று வரலாற்றின் தவிர்க்கமுடியாத முதற் பணியாகும்.

சரிநிகர் 109 இல் ( நவம்பர் 07 நவ 20 ) புதியஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த சிவசேகரம் மூன்றாம் உலகில் சோவியத் தலையீட்டையொட்டி கூறுவதைப்பார்ப்போம்.
"

" சோவியத்ஒன்றியம் ஒரு சமுக ஏகாதிபத்தியம் என்ற கருத்து எனக்கு உடன்பாடான ஒன்றல்ல. அது மூன்றாம் உலக நாடுகளின் ஒரே இரட்சகன் என்ற விதமான கருத்து. அதே அளவுக்கு நிராகரிக்கத்தக்கது."" என சிவசேகரம் கூறுகிறார்

அப்படியாயின் தமிழ் தேசியவிடுத லைப்போராட்டத்தில் இந்தியத் தலையீட்டை ஒரு பிராந்திய ஆதிக்க சக்தி என்பதிலும் உடன்பாடில்லை. இந்தியா தேசியவிடுதலைப்போரின் ஆதரவாளர் என்பதிலும் ▷25பக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போலந்து



மாவோ சொன்னார் "" பொருட்களின் சாராம்சத்தை உள்ளடக்கத்தில் தேட-வேண்டும் உலுவத்தில் அல்ல"" என்றார். ஆம் போலந்து போலிகள் உருவத்தில் கம்யுனிஸ்ட்டுக்கள் .உள்ளடக்கத்தில் முதலாளித்துவத்தின் பிரதிநிதிகள். உலக பன்னாட்டு நிறுவனத்தின் எடுபிடிகலாக வலம்வரும் இந்தப்பிரதிநிதிகள் கம்யுனிசத்தின் பெயரால் மக்களை ஏமாற்றிக் கொள்ளையடிக்க முயலும் கயவாளிகளே.

ஜனநாயகத்தை மீட்ட அதாவது கொள்ளையடிக்க கதவுகளைத் திறந்த, வலேசவுக்கு எந்த விதத்திலும் தாம் சளைத்தவர்கள் அல்ல. என்பதைப் போலிகள் உலகளவில் இனம் காட்டத் தீவிரமாக அலைந்தனர். அலைகின்றனர். மக்களை விட கொள்ளையடித்தவனைக் திருப்த்ப்படுத்தும் இந்தப் போலிகளை-யிட்டு, பிரஞ்சு போலிக் கம்யுனிஸ்ட்டுக்கள் இவர்களை "" சமூகசனநாயக வாதிகள் "" எனக் குற்றம் சாட்டி தம்மைப் பாதுகாக்க முனைந்தனர்.

அண்மையில் உலகை இரட்சிக்க வந்ததாக கூறிக்கொள்ளும் போாப் பாண்டவர் விஜயம் செய்தபோது போலிகள் ஓடோடி வந்து கைகோர்த்தனர். எமது குறிக்கோளும் ஆண்டவனின் குறிக்கோளும் ஒன்றுதான் என பிரகடனம் செய்தனர். உலகை எப்படிக் கொள்ளையடிக்கலாம், மக்களை எப்படி எப்படி ஏமாற்றலாம் என்பதில் கருத்து முரண்பாடு இல்லையென பிரகடனம் செய்தபடி தமது நோக்கத்தைத் தெளிவுபட விளக்கினர்.

ஆம் கம்யுனிச ஜனநாயக விரோதமானது எனக் கூறி, மக்களின் அடிப்படை வசதியைக் கோருவது பயங்கரவாதம் என அறிவித்து, சிலர் வாழும் வாழவு இறைவனின் கொடை என்றனர்.
அதை நிறைவு செய்ய முன்பு வலேசா மூலம் போப்பாண்டவர் நேரடியாகப் போலந்தில் இரகசியக் குழுக்களை அமைத்தும், அச்சகங்களை நிறுவியும் இரகசிய அரசொன்றை நடாத்திய, இந்தக் கும்பல் தான் உலகை மீட்க வந்த இரட்சகர்களாகப் பிரகடனம் செய்கின்றனர்.
அதேவகையில் போலிக்கம்யுனிசக் கட்சியும் தனது எல்லாவித புரட்சிகரக் கோசங்களையும் கைவிட்டு விபச்சாரத்தில் ஈடுபடத் தொடங்கிவிட்டது. இந்தத் துரோகத்தை நாம் பார்த்துக் கொண்டு இருக்கப் போகிறோமா அல்லது எதிர்த்துப் போராடப் போகிறோமா என்பது எம்முன்னுள்ள ஒரேஒரு கேள்வி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இஸ்ரேல் பலஸ்தீன ஒப்பந்தம் இலங்கைக்கு ஒரு மாற்று அல்ல

இஸ்ரேல் பலஸ்தீன ஒப்பந்தத்தை இலங்கையில் இனப்பிரச்சனைக்கு மாற்றாக முன்வைக்கக் கோரி பல வேறுபிரிலும் முன் தள்ளப்படுகிறது. இஸ்ரேல் பலஸ்தீனம் வழியில் ஈழப் போராட்டத்தைக் கைவிடப் புலிகளைக் கோருகின்றனர். இந்த வேண்டுகோளை இலங்கை வந்த அரபாத் கூடவிட்டு வைக்கவில்லை.

ஆனால் இஸ்ரேல் பலஸ்தீனத்திலோ நீறுபூத்த நெருப்பாக நிலைமை மாறி வருகிறது. இஸ்ரேலிய யூத ஆதிக்க வாதிகள் கிட்டலரின் வழியில் பலஸ்தீன மண்ணின் மைந்தர்களைக் கொன்று அழித்துவிடுவது மட்டுமின்றி அவர்க-ளின் மண்ணில் தொடர் குடியேற்றங் களை நடத்திவருகிறது. இதை எதிர்த் துப் போராடிவருபவர்களை கைது செய்தும், படு காயத்திற்குட்படுத்தியும் கொன்றும் தனது வெறிபிடித்த யுத்த ஆதிக்கத்தைதத் தொடர்கிறது.

இந்நிலையில் கையேலாத்தனத்தின் தொடர்ச்சியில் அரபாத் புலம்பவே முடிந்ததே ஒழிய, அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஏன் ஒப்பந்தத தைக் கைச்சாத்திட செய்த அமெரிக் கா இஸ்ரேல் சார்பான நிலையை எடுத்து வாக்களிப்பில் நடுநிலை, வீட்டோ அதிகாரத்தை ஐக்கியநாடுகள் சபையில் பயன்படுத்தல், பலஸ்தீனம் மீது நிர்ப்பந்தம் கொடுத்தல் என்ற வகையில் அமெரிக்கா யூதஆதிக்கத் தைப் பறைசாற்றி பிரகடனம் செய்கின் றனர்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை மறைமு-கமாக ஊக்குவித்துச் செயற்படும் அமெ ரிக்க ரவுடித்தனத்தையே பலஸ்தீனத் தலைவர் அரபாத் உட்பட பலர் இலங்கைக்கு மாற்றாக முன்தள்ளுவது என்பது மோசடியாகும்.
இன்று பலஸ்தீன மைந்தர்கள் தமது




எல்லா பலத்தையும் பயன்படுத்தி போராட புறப்பட்டது என்பது, உலகக் கபடதாரிகளை பீதிக்குள்ளாக் கியுள்ளது. இதைப்பயங் கரவாதம் வன்முறை, ஜனநாயக விரோதம் என ஒருபுறம் ஒப்பந்தத்தைக் கைசாத்திட் டவர்கள் முதல், உலக அரசுகள் அரற்ற அந்த மக்கள் தமது விடுதலைக்காக தாம் போராடுவதைத் தவிர வேறுவழியில்லை என்பதை அநுபவமூலம் கற்று போராட தொடங்கி விட்டனர். இதை எந்த ஆயுதபலத்தா லும், துரோகத்தாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இதுதான் நாளை தமிழீழத்திற்கும் நடக்கும் என்பதை நாம் புரியத் தவறின் வரலாற்றில் மேலும் மக்கள் விரோத துரோகிகள் உருவாவது வதிர்க்கமுடியாது. இதை எதிர்த்துப் பேராடுவதும் தவிர்க்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# எஸ்.வி. ராசதுரையின் அப்பட்டமான திரிபு அதுவும் மார்க்சியத் துக்கு எதிராக

சரிநிகர் 125 இல் எஸ்வி ராசதுரை "" எழுதாத வரலாறு"" என்ற பெ. முத்துலிங்கத்தின் நாவலை அறி-முகம் செய்து ஒரு தொடர் கட்டுரையை எழுதியிருந்தார். அந்த நாவலை அறிமுகம் செய்த தொடக்கநிலையில் எஸ்வி ராசதுரையின் வர்க்க குணம் மார்க்சியத்திற்கு எதிராக அப்பட்டமாகத் திரிக்கும் துணிவைக் கொடுத்துள்ளது. அதைப்பற்றி நாம் இங்கு பார்ப்போம்.

"" உண்மை என்ன ? திராவிடக்கழக வெளியீடு சென்னை (1985) பெரியாரின் சுயசரிதை இயக்கத்தில் நெகழ்ச்சித் தன்மை இல்லாததாலேயே ப. ஜீவானந்தம் போன்றோர் வெளியேறினர் என்கிறார் முத்துலிங்கம். (பக் 5) உண்மையில் தமிழக இலங்கைச் சூழ்நிலைகளை சாதியம், பார்ப்பனியம் ஆணாதிக்கம் தேசியஇன அடையாளங்கள் மதவாதம் போன்றவற்றை கருத்திற் கொள்ளாத ஒரு யாந்திரிகமான மார்க்சியம் தான் நெகிழ்ச்சித் தன்மையற்றதாக இது இருந்திருக்கிறது. இந்த உண்மையைத்தான் பெரியார் " சுயதரியாதை சமதர்மம் என்ற எங்கள் நூல் மட்டுமின்றி பெ.முத்துலிங்கத்தின் எழுதாத வரலாறும் சுட்டிக் காட்டியிருக்கிறது. என எஸ்.வி ராசதுரை என்ற மார்க்சிய விரோதி முதல் வரியிலும் அடுத்த வரியில் திரிக்கும் கலைதான் என்ன அற்புதம். பெ. முத்துலிங்கம் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் நெகிழ்வுத் தன்மை இல்லை எனச் சொல்ல அதை மார்க்சியம் மீது சொன்னதாக திரித்து கரடி விட அதுவும் மார்க்சியத துக்கு எதிராக எனின் ... சுரண்டும் வர்க்க நேச கட்டுரையில் முரண்பட்ட பொய்யைக் சுட காண மறுத்து விட்டது.

மார்க்சிய நெகிழ்ச்சி தன்மையைக் கொண்டது அல்ல எனக் கூறும் போது எஸ்.வி.ரா போன்றவர்களுக்கு மார்க்சிய அரிச்சுவடியே தெரியாத பேதைகள் என்பதை வெளிக்காட்டுகிறது.

மார்க்கசியம் மனிதன் மீது செயற்படும் அனைத்து தளத்தின் மீதும் இயங்குகிறது. இதில் தவறு இழைக்கும் போது வலது இடது தவறை இழைக்கின்றன. இதிலிருந்து விடுபட புரட்சிகரப் பிரிவுகள் தம்மை விமர்சனத்துக்குள்ளாக்குகின்றன. அது சாத்தியம் இல்லாது போதில் வெளியேறி மீண்டும் போராடுகின்றன.

இது இந்திய இலங்கை கம்யுனிச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாறு ஆகும். மக்களிக் அடிப்படைப் பிரச்சனைகளை மீது போராடாத அமைப்பு பெயரளவில் கம்யுனிசக் கட்சிகளே. இதைப்பற்றி ஏதும் இன்றி மார்க்சியம் மீது சேறடிப்பது முதலாளித்துவ காழ்ப்புணர்வுதான்.

இங்கு " நெகிழ்ச்சி " என்பது மார்க்சிய விரோதிகள் மார்க்சியத்திற்கு எதிராக காட்டப் பயன்படுத்தும் சொற்பதமேயாகும். மார்க்சியசமுதாயத்தில் எல்லாப்பிரச்சனைகள் மீதும் செயலாற்றுகின்றன. இதுதான் சோவியத் முதல் இன்றுவரையும் இன்று மார்க்சியத்தின் அடிப்படை உயிராகும்..

அதைக்காணமறுத்து மார்க்சிய விரோதிகள் வர்க்கப் போராட்டம் மட்டும் என மார்க்சியத்தை கற்பனை பண்ணிக் காட்டுவது சாராம்சத்தில் அரசியலைக் கைவிட்ட பொருளாதார வாதத்திற்கு சிக்கும் போக்கினைப் போன்று இவர்க்ள மார்க்கியத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்ய திரித்துக் கட்டும் அழுக்கு மூட்டையாகும்.

சிவசேகர ...
உடன்பாடில்லை என்ற கூற்றுக்கு ஒப்பானது.

அப்படியாயின் அது என்ன? இந்தியா ஒரு பிராந்திய ஆதிக்க சக்தி என்பதை எப்படி மறைக்க சிலர் முனைகின்றனரோ அதேபோல் சோவியத் ஒரு சமூக ஏகாதிகத்தியம் என்பதை மறைப்பது சிலருக்கு அவசியமாகவுள்ளது. சீனாவில் மாவோவை மறுத்ததைத் தொடர்ந்து இவர்களும் ( சிவசேகரம் மற்றவர்களும் ) மறுக்கின்றனர். அதன் காரணத்தால் மாவோவும் சில கொம்யுனிஸ்ட்டுக்களும் கலாசட்சாரப் புரட்சி எதற்காக தொடங்கினரோ அதை மறுத்துப் புதிய ஜனநாயககட்சியும் சிவசேகரமும் அடிப்படை வர்க்க முரண்பாட்டை மறுதலிக்கின்றனர். அதனால் தான் சோவியத் சமூகஏகாதிபத்தியமாக இருந்ததை மறுத்து இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு வடிவம் தேடுகின்றனர்.
அதாவது தமது அரசியல் பிழைப்புவாதத்துடன் வர்க்கப் போராட்டத்தை கைவிட்ட ஒரு வடிவம் தேவை. அதற்கு ஒரு கோட்பாடு தேவை, அது இரண்டுமல்லாத ஒன்றாகக் காட்டுவதான் தமது இருப்பை தக்கவைக்க உதவும் என்ற கனவு.

# உலக வங்கி தீர்மானிக்கும் விலை அதிகரிப்புப் பற்றி..........


## இலங்கை அமைச்சர்

தேசிய நீர் வழுங்கல் வடிகாலமைப்பு சபை பிரதித் தலைவர் சு.று.ஆ வ விதேலக்கா நீர், மற்றும் தொலைபேசி விலை உயர்வு தொடர்பாக குறிப்பிடும் போது, உலக வங்கியின் கட்டாயப்படுத்தலாலே இந்த விலை அதிகரிப்பு என்று குறிப்பிட்டு, இந்த அதிகரிப்பை கடந்த வருடமே அமுல்படுத்த கோரியிருந்தனர் எனவும் குறிப்பிட்டார். அமச்சர்களின் இழுத்தடிப்புத்தான் இந்த ஏப்பிரலில் அமுலுக்குவர காரணமென்று வேறு அறிவித்தார். இன்று அமைச்சர், அரசுக்கு மீறிய அரசாக உள்ளது. உலக வங்கியே ஆகும். இதன் இயக்கம் அமெரிக்காவின் கையில் உள்ளது. ஏகாதிபத்தியங்கள், உலக வங்கி ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் மேலும் ஏழையாக்கியும் பணக்காரரை மேலும் பணக்காரனாக்கும் இன்றைய உலக சனநாயகத்தை உடைக்காதவரை மக்களுக்கு சனநாயகம் இல்லை என்பதை இது காட்வில்லையா? இது உங்கள் மூளைகளில் உறைக்கவில்லையா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஏற்றத்தாழ்வை போற்றுவது

அது அழகியலாக இருந்தாலும் இவை இன்றைய உலகத்தின்

# ஆளும் வர்க்கத்தின்

# கோட்பாடே!

சரிநிகர் 122 இல் "" ஆணில்பூத்த கலாபூர்வமும் முகிழ்த்த ரசனையும்"" என சுவீஸ் ரவீந்திரன் ஒரு விமர்சனக் கடிதம் எழுதியிருந்தார். அதில் வரும் மார்க்சிய விரோத கருத்துத் திணிப்பபை அம்பலப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரையை சமரில் எழுதுகிறோம். சரிநிகர் திட்டமிட்டு எமது கருத்தை பிரசுரிக்க மறுத்து வருகின்ற நிலையில், எமது கருத்தை சரிநிகரில் எழுதமுடியாத நிலையிலேயே நாம் இதனை சமரில் எழுதுகின்றோம். நாம் அனுப்பிய பல கட்டுரைகள் இதுவரை பிரசுரிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் தேசியப்பிரச்சனை தொடர்பாக ஒரு விவவாதம் என்ற தலைப்பிட்டு "" மார்க்கசியமும் தேசியமும் "" என்ற புத்தகத்திலிருந்து கேசவனின் கட்டுரையை சரிநிகர் 116 இல் பிரசுரித்தவர்கள் அந்த புத்தகத்தை யொட்டிய விமர்சனம் சமர் 17 இல் வெளிவந்திருந்தது. ஆனால் விவாதம் நிகழ்ந்தது எனக் குறிப்பிட்ட சரிநிகர் அதை பிரசுரிக்க வேண்டும் என்ற விவாதப் பண்பைக் கூட இழந்து போயுள்ளது.

கேசவனும் அவரைச் சேர்ந்த சரிநிகர் பிரிவும் தமது கட்டுரைகளை எழுதி வெளியிட்டு அதற்கு விவாதம் எனப் பெயரிட்டவர்கள், சமரில் வெளிவந்திருந்த ஒரு படத்தை அக்கட்டுரைக்குள் பிரசுரித்து இருப்பதுதான் அதை விட மிகவும் மோசமானது.

தமது சித்தாந்த குரு அந்தோணிசாமி மார்க்ஸ் அவர்களை அறிமுகம் செய்ய விரும்பிய சரிநிகரின் மார்க்சிய திரிபுவாத பிரிவு சரிநிகர் 114 இல் ஒரு முடிமறைக்கப்பட்ட அரசியல் விபச்சாரத்தை செய்து இருந்தனர். அதை அம்பலப்படுத்திய எமது விமர்சனத்தை சநிநிகர் பிரசுரிக்க மறுத்ததென்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களின் நோக்கத்தையே தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு சநிநிகர் இன்று விவாதம், விமர்னம் என்ற பெயரில் செய்வது ஒரு தலைபட்சமான கருத்து திணிப்பை, அரசியல் விபச்சாரத்தை அம்பலப்ப டுத்தி சமர் தொடர்ந்து எழுவதைத் தவிர வேறுவழியில்லை.

இனி இரவீந்திரனின் விமர்சனத்திற்கு வருவோம்.

ஒளவை ஆணாதிக்க அழகியலை எதிர்த்து எழுதிய விமர்சனத்தைத் தொடர்ந்து, பலரும் விமர்சனங்களை முன் வைத்திருந்தனர். இங்கு இரவிந் திரனின் விமர்சனம் பற்றியும் அதேநேரம் அதே இதழில் யமுனா ராயேந்திரன், ரவீந்திரனுடன் ஒன்றுபட்ட ஆணாதிக்க விமர்சனத்தை யும் இக்கட்டுரை கேள்விக்குள்ளாக்கி றது.

அழகியல் தொடர்பான தமது கருத்து நிலை என்ன என்பதை ரவீந்திரனோ, (ஆணாதிக்கத்துக்கு வெளியில்) யமுனா தெளிவுபடுத்த முடியாது போயுள்ளனர். ஆணாதிக்க அழகியலை எதிர்ப்பதாகக் கூறும் இவர்கள் இருவரும் ஓர் அழகி யல் உண்டு என்பதை கூறவருகின்றனர் ஆனால் அது என்ன என்பதையோ அதன் வரையறையையோ கொடுக்க முடியாது போயுள்ளனர்.

ஒரு பொருளின் அழகியல் என்பது என்னவாக உள்ளது என அறிவியல் ரீதி .யாக நாம் ஆராய்வோம்:- ஒரு பொரு ளின் வேறுபட்ட தன்மையை அழகி யலாகக் காட்டி விடுகின்றனர். வேறு பட்ட தன்மை என்பது எப்படி எதனால் ஏற்படுகிறது ? நாம் வாழும் சூழல் (காலநிலை, இயற்கை அமைப்பு, நீண்ட பரிணாம வளர்ச்சி, பொருளாதார பலம், சாதி, மதம், இனம் , நிறம் , தொழிநுட்ப வளர்ச்சி, ஆதிக்கம் ) என எண்ணற்ற கூறுகளின் தொகுப்பில்தான் ஒரே பொருளின் வேறுபட்ட தன்மை பேணப்படுகிறது. ஒரு பெண்ணையோ ஆணையோ எடுப்பின் ஒரு பெண்ணுக்கும் ஒரு பெண்ணுக்கும், ஓர் ஆணுக்கும் ஓர் ஆணுக்கும் இடை யில் உள்ள வேறுபாட்டை நியாயப்படுத் தும் எல்லா அடிப்படையும், அதேபோல ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் (விதிவிலக்காக இன உற்பத்தி உறுப்புக்களைத்தவர ) உள்ள வேறு பாட்டை நியாயப்படுத்தும் எல்லா அடிப்படைகளும், அடிப்படையில் மனி தன் மேல் சவாரி செய்யும் வெவ்வேறு வடிவங்களேயாகும்.

ஆபிரிக்க கறுப்பு இன பெண்ணையும், சைரேயில் கையேந்தும் பெண்ணையும், வெள்ளையினப் பெண்ணையும், பள்ளர் இனப் பெண்ணையும், கல்லுடைக்கும் பெண்ணையும் பார்பானிய பெண்ணை யும், ஒப்பிட்ட வேறுபாட்டில் என்ன அழகியலை விளக்க முடியும் ? என்ன வரைவிலக்கணத்தைக் கொடுக் முடியும்? அந்த வேறுபட்ட தன்மையும் சமநுகர் வை சமுதாயம் அடையும் போது இயல்பாகக் கடக்க முடியும் இது நிறம், என அனைத்தையும் கடந்த ஒரு பொதுத்தன்மையைகப் பெறமுடியும். குறைந்தபட்சம் பொருளாதாரப் பலம் பெற்ற ஐரோப்பாவில் மக்களுக்குள் (உருவம், நிறம்...) இந்த வேறுபாடு அருகி வருவதை மூன்றாம் உலகத் துடன் ஒப்பிட்டு இனம் காணமுடியும்.

மனிதனின் கண்ணுக்குத் தெரியும் புற அகஅழகை நியாயப்படுத்தும் கோட் பாட்டு வடிவங்கள் அனைத்தும் இந்த சுரண்டும் உலகின் வெவ்வெறு வடிவங் களாகும். நாம் உண்மையில் இந்த சமுதாயத்தில் எதை அடையாளப்படுத்த வேண்டும்? மனித நேயத்தை, மனித பண்பை , நேர்மை, தன்மானத்தை, போராடும் பண்பை, மதிக்கும் பண்பை , அன்பை , ஆதரவை , அச்சமின்மையை தேடும் பண்பை. . . எனப் பலவற்றை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்க்க கண்ணோட்டத்தில் காணவேண்டும். இதற்கு அழகியல் எனப் பொதுவாக வரையறுப்பதன் மூலம் இதன் உயிர் மூச்சை கொன்றுவிடுவதாகும்.

நாம் ஒரு பொருளின் வடிவம், உள்ளடக்கம் , பொருளியல் பண்பு , அது செயற்படும் தன்மை, அதன் பயன்பாடு, சொல்லும் வடிவம் என அனைத்தையும் பொருளில் தேட வேண்டும் இதைவிடுத்து அழகு, கவர்ச்சி கலாபூர்வமானது எனச் சொல்வது மகா மோசடியாகும்.



ஒரு படைப்பு அது எதுவாக இருந்தாலும் அதை வெறும் பண்டமாக ஐரோப்பிய உற்பத்திப் பொருட்களைப் போல (பழவகை, இறைச்சிவகை) விற்பனைக்காக ஏமாற்றுக்காகப் படைப்பதை மறுபக்கம் எதிர்க்க வேண்டும். மாறாக அதன் உள்ளடக்கம் அதன் அறிவுபூர்வமான எல்லா உட்கூறுகளையும் வெளிக் கொணரும் வகையில், அது தனது நுணுக்கமான கலைத்திறனைக் கொண்டிருக்க வேண்டும்.

இது அப்பொருளின் பயன்பாட்டினை மீறியதாக இருக்ককூடாது. ஒரு சிறு-கதை, கதை என எதை எடுத்தாலும் எந்த ஒரு சொல்லோ வரியோ சம்பந்தமில்லாது வரின் அது கலை என்பதல்ல மாறாக கலைத்தன்மை குறைந்த வெளிப்பாடாகும்.

ஒன்றைப் பயன்படுத்தும் போது அது அப்பொருளின் பயன்பாட்டின் வெற்றிக் கானதாக இருக்க வேண்டும். இது பயன்பாட்டின் வாதம் என யாரும் கூறின் உண்மையில் அதை மறுத்தபடி அதையே செய்ய முயலுகின்றனர். இது சுரண்டும் வர்க்கத்தை பாதுகாக்கத்தான்.

இது மனிதனை மந்தையாக மாற்றுவதற்கு அப்பால் பெரிதாக வேறு எதுவும் இல்லை. ஒரு பொருளின் அதன் மரபை மறுக்காத இடைவெளியைக் கடத்தல், என்ற உலக ஏற்றத்தாழ்வைக் கடக்கும் போது நிகழ்ந்துவிடும். அதை நோக்கிய எமது கருத்துத் தளம் இயங்க வேண்டும். அதை மறுத்த நியாயப்படுத்தும் வெவ்வேறு கோட்பாடு, தனக்குள் அடிப்படையில் பிளவை வைத்திருக்கச் செய்யும் ஒரு தீவிர முயற்சியாகும்.

இதை ரவீந்திரன், யமுனா ராஜேந்திரன் எப்டிச் செய்ய முனைகிறார்கள் என்பதை அவர்களின் வரிகளிலிருந்தே ஆராய்வோம். ரவீந்திரன் கூறுவதைப் பார்ப்போம்:-

““ துள்ளியோடும் மானைப்பார்த்து ரசிக்கின்றோம். புலிகளின் வரிகளைப் பார்த்து ரசிக்கின்றோம் எங்கும் கலாபூர்வமாக ரசிப்பது கலாபூர்வமற்று ரசிப்பது என்று வரையறை செய்வதில்லை. ரசிக்கின்றோம் உண்மை ரசனை மறுக்கப்படுவது இல்லை. அழகியல் மறுக்கப்படுவதில்லை ““ என்கிறார் ரவீந்திரன்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாபூர்வமாக ரசிப்பது என எழுதிய கே.எஸ் சிவகுமாரனின் ஆணாதிக்க அழகியலை மறுக்கப் போனவர் அதைக் கடந்தவரா என்றால் இல்லை. மாறாக அதையே வேறு ஒரு வடிவில் நியாயப்படுத்தி விடுகிறார். அதைப்பார்ப் போம்.

"ரசனை மறுக்கப்படுவதில்லை அழகியல் மறுக்கப்படுவதில்லை" என்று கூறும் இவர் அவை எந்தளவில் எந்தக் கோட்பாட்டில் உண்டு என எந்த ஒரு விளக்கத்தையும் தரவில்லை. பெண்ணை ரசிக்க முடியும் பெண் அழகியலை மறுக்க முடியாது என்பது தான் ரவீந்திரன் சுற்றி வளைத்துச் சொல்லும் மறுவிளக்கமாகும். ஆனால் அதை அப்பட்டமாக மூடிமறைக்க, அது ஆணாதிக்க அழகியலாக இருக்கக் கூடாது என்பது ஆணாதிக்க ஆணின் அங்கலாப்பன்றி வேறு ஒன்றும் இல்லை.

மூன்று வயது பச்சிளம் குழந்தையின் சிரிப்பு, அழகு, துள்ளியாடும் அழகு என அனைத்தையும் ரசிக்க அழகைக்காண முடியும் என்பது ரவீந்திரனின் எடுகோளாகவுள்ளது.



நல்லது உங்கள் குழந்தைக்கும் ஆபிரிக்க நாட்டில் அடுத்த நேரத்துக் கஞ்சிக்கு கையேந்தும் எலும்புகள் கையேந்தும் அழகும் இலங்கையில் அலைந்துதிரியும் காய்ந்து போன குழந்தைக்கும் இடையில் என்ன அழகியல் ரசனை உண்டு. என்ன அழகு வேறுபாடுண்டு என்று விளக்க முடியுமா?

ஒருவன் ஒரு குழந்தையின் அழகை ரசனையைப் பற்றி பேசுவானாயின் அவன் சுயநலம் பிடித்த, அதேநேரம் சுரண்டும் வர்க்க கோட்பாடின் எல்லைக்குள் திரிபவரர்களே.

ஒரு குழந்தையின் ஆரோக்கியம் அதன் கல்வி என்பவற்றை ஒரு பெற்றோர் பெற்றுக் கொள்ளப் போராடும் அதே நேரம், அது மற்றப் பிள்ளைக்குப் மறுக்கப்படுவதையிட்டுப் போராடாத அழகியல் ரசனை முகமூடி வெறுக் கப்பட வேண்டியவை. துள்ளிக்குதிக்கும் மான், வரிப்புலி புற அழகைப் பற்றி பேசுபவன் அதன் வாழ்வியலைப் பேசுவன் உண்மையில் பலவற்றை மறைக்க விரும்புகிறான். மான் புலியின் வடிவம் , வரிகளின் நிறம் என்பன இயற்கையை பரிணமிக்கும் உயிர் வாழும் போராட்டம் என்ற எல்லைக்குள் ளானவை. அவற்றுக்கிடையான உணவுக் கான போராட்டம் மட்டுமே உண்டு. ஆனால் மனிதர்களுக்கு உள்ளது போல் சூறையாடும் தன்மை கிடையாது.

இந்த உயிர்வாழும் போரில் மனிதன் சூறையாடும் பொருளாதாரத்துக்கு இயற்கையை எப்படி அழிக்கின்றான் என்று அதன் இயல்பை சேதத்திற்குள் ளாக்குகின்றான் எனப் பேசமுடியாத அழகு வெறுக்கத்தக்கது, கேவலமானது.

அடுத்து ஔவை கூறும் ஒன்றை எடுத்து ரவீந்திரன் கூறுவதைப் பார்ப்போம் .

"நமக்குத் தேவை பெண்ணைப் பெண்ணாகச் சித்தரிப்பதேயன்றி ஆண்களின் கண்ணோட்டத்தில் பெண்ணைச் சித்தரிப்பதல்ல என்ற ஆழமான கருத்தோட்டத்தை ஊன்றியபடி நிற்கிறார். இதைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுப்புத்தியுடன் முகம் கொடுப்பது சரியல்ல." என்கிறார் ரவீந்திரன். இது அடிப்படையில் தவறான வாதம். பெண்ணை பெண்ணாக எப்படிச் சித்தரிப்பது? இங்கு கேள்விக்குள்ளாக்குவது அழகியல் என்பதால், பெண்மீதான ஒடுக்குமுறை மீதானது அல்ல இவ்விவாதம். அவள் ஒரு பெண் எனக் கூறுவது கூட மனித பிளவின் அடிப்படையாகும். பெண் ஆண் அடையாளங்களைக்கடந்து (இன உறுப்புக்கள் விதிவிலக்காக) அனைத்தையும் சாதிக்கும் கோட்பாடு தான் மனிதனின் சமநிலையை கோருவதாகும்.

இதைமறுக்கும் கோட்பாட்டுத் துறையில் பெண் ஒடுக்குமுறையைத் தனியாக அடையாளப்படுத்துவது அல்ல. மாறாக பெண் ஆண் என்ற கோட்பாடுகளை செயற்தளங்களை தகர்த்தால் மட்டுமே ஒரு சரியான நோக்கு நிலையும் ஒரு சரியான கோட்டுப்பாட்டிற்கு அடையாளமாகும்.

ரவீந்திரன் இன்னொர் இடத்தில் "" பெண்களின் தலைமயிரிலிருந்து யோனிவரை அழகைப் பற்றிய வரைவுகளைப் யார் செய்தார்கள்? ஆண்களின் கண்ணோட்டத்தில் இல்லையா, என்பதே கேள்வி. (அக, புற அழகு உள்ளிட்ட) பெண்மை எனும் கருத்தாக்கத்தைப் தந்ததும் ஆண்கள்தான்."" என்கிற ரவீந்திரன் வசதியாக 'ஆண்மை' என்ற கருத்தாக்கத்தை வரையறுத்த ஆண்களை மறந்து விடுகிறார்.

யார் வரையறை செய்தது என்ற வரையறைக்குள் பிரச்சனையை முடித்துவிட முனைகிறார். பிரச்சனை யார் வரையறை செய்தது என்பது அல்ல. மாறாக இது கோட்பாட் டுப் பிரச்சனையாக, வர்க்கப் பிரச்சனையாக உள்ளது. பெண் அழகுக்கு ஒரு விளக்கம் ஆணாதிக்கம் அற்ற ஒரு சமுதாயத்தில் கொடுக்க முடியும் என்கிறார். ஆணாதிக்கம் அற்ற, ஒரு பெண் ஆண் புற அக நிலையில் பெண் அழகியலை விளக்க கொடுக்க முடியும். இப்படி கூறுவது என்பது மூடிமறைக்கப்பட்ட ஆணாதிக்கமாகும்.

புற, அக அழகு பற்றிய சிந்தனை வர்க்க சமுதாயத்தில் மனிதக் கண்டுபிடிப்பில் எழுப்பட்ட கருத்தே. அந்தக் கண்டுபிடித்தல் என்பது உலகுபற்றிய பார்வை சார்ந்ததே. மனிதன் அதைக் கடக்க வேண்டுமா? இல்லையா? என்பதே கேள்வியாகும். அதைவிடுத்து நியாயப்படுத்த கோட்பாடு கொடுப்பதல்ல.

அடுத்து ரவீந்திரன் கூறுவதைப் பார்ப்போம்:-

"" இப்படி ஆண் நோக்கில் கற்பிதப்படுத்தப்பட்ட பெண்ணின் அழகியலை மீறி கலாபூர்வமாக ரசிப்பது என்பதை விளங்கக் கடினமாக இருக்கிறது. ஒரு பெண்ணைக் கலாபூர்வமாக ரசித்த நாலுவரிகளைக் கே.எஸ். எஸ் எழுதிக்காட்டுவாரானால் சிலவேளை எமது கருத்தைப் பரிசீலிக்க உதவலாம்." எனப் பிரகடனம் செய்யும் ரவீந்திரன் ஆண் நோக்கில் இல்லாத அழகியலில் நான்கு வரிகளை எதிக்காட்டியிருக்கலாம் அல்லவா. ஆனால் அவரால் முடியாது. பாவம் கே.எஸ்.எஸ் விவாதிப்பதும் ரவீந்திரனின் விவாதிப்பதும், பாதுகாக்க நினைப்பது ஒரேவிடயம் தான் என்ற உண்மையை மறைப்பது தான் இருவருக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடாகும்.

அது சரி இந்த ரவீந்திரன் முதல் இவர்களின் சித்தாந்த குரு அந்தோனிசாமி வரை கற்பிதம் என்ற சொல்லை அடிக்கடி பல விடயத்தில் பயன்படுத்துகின்றனர். இந்த கற்பிதம் தொடர்பான ஒரு விரிவான விளக்கம் சமரின் பிறிதொரு வெளியீட்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விவாதிக்கவுள்ளோம். இருந்தபோதும் சுருக்கமாகப் பார்ப்போம்.

கற்பிதம் என்பது மாயை அதாவது இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டுவது என்ற விளக்கத்தை மீறி கற்பிதம் என்ற சொல்லுக்கு வேறு அர்த்தம் கிடையாது. ஆண் நோக்கில் கற்பிதம் செய்யப்பட்டது என்பது இல்லாத ஒன்றை பற்றி கற்பிதமாக உள்ளதாக காட்டமுனைவதன் நோக்கம் என்ன? அதன் நோக்கம் பொருளை மறுப்பதாகும். கருத்தை முதன்மையா னதாக இட்டுக் கட்டுவதாகும் . இன்று புலிகளுக்கு எதிராக எழுதின் புலிகள் சுடுவார்கள் எனக் கூறுவது கற்பிதமாக இருப்பதில்லை. மாறாக சுட முன் சரி சுட்டபின் சரி அது கற்பிதமானதல்ல. அதாவது அது நடக்கும் பொருளாக உள்ளது என்பது உண்மையே. இதை விடுத்து புலி சுடும் என்பது கற்பிதம் எனின், உண்மையில் அதற்கு எதிரா கப் போராட வேண்டிய உணர்வையும் தற்காப்பையும் மறுதலிக்கும் திசை-திருப்பும் சதியுமே எஞ்சியிருக்கும்.

தமிழ் ஈழவிடுதலைப் போராட்டம் தீவிர மடையமுன் பல்வேறு முதலாளித்துவ இடதுசாரி குழுவினர் தேசியம் என்ற ஒன்று கிடையாது அது கற்பிக்கப்டு கிறது என்ற அதையே, இன்று கோட்பா டாக்கி தேசியம் முதல் எல்லா கூறுக ளும் கூறுவது என்பது அதன் பொருளை மறுப்பதாகும்.

ஆணாதிக்கம் கற்பிதம் என ஒரு பெண் கூறின் பெண்ணியம் கற்பித்தல் என் ஒருவன் கூறின் அவனின் நோக்கம் தெளிவானது. ஆணாதிக்கம் என்ற ஒன்று இல்லாமல் அதைக் கூறுவதா கவும் பெண்விடுதலை என்ற ஒன்று இல்லாமல் அதைக் கூறுவது என்றவகையில், " கற்பிதம் என்ற சொல்லினூடாக ஆணாதிக்கம் என்ற ஆணாதிக்க கருத்தியலைப் பாது காக்கவும், பெண்ணியம் என்ற விடுத லைத் தத்துவத்தை மறுப்பதுமாகும். ஒரு பொருளின் தன்மை அதன் இருப்பை மறுப்பதனூடாக அதன் உண்மையை இந்த உலகத்தில் எப்படி உள்ளது என்பதைக் காணமுடி யாது இருத்திவைக்கும் ஏகாதிபத்தியம் சார்ந்த கோட்பாட்டினை மையப்புள்ளி யே கற்பிதமாகும்.

மனித குலத்தின் ஆரம்பத்தில் இல்லா த உள்ள ஒன்றை கற்பிதம் செய்வதா க அதற்கு மறுவிளக்கம் (அடிக்கடி மறு வாசிப்பு செய்பவர்கள் அல்லவா) கொடுத்து அதையே கூறுகின்றோம் என வாதிட முயலலாம்.




அப்படிப் பார்த்தால் உலகமே கற்பிதம் தான் பூமியே கற்பிதம் தான். இந்த சூரியக் குடும்பமே ஏன் எல்லாக் கோடானுகோடி சூரியக் குடும்பமும் கற்பிதமே.

எல்லாம் கற்பிதம் எனில் எதற்காகப் போராட வேண்டும் என்ற கேள்விக்கு இட்டுச் சென்று போராட்ட குணாம் சத்தை, வாழ்வுக்கான நியாயப் போராட் டத்தை மறுதலித்து ஏகாதிபத்தியத் திற்கு சேவை செய்ய முனைகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு பொருளோ அதைச் சார்ந்த செயலாக இல்லாத வரைதான் அது கற்பிதம். அது பொருளாக செயலாகி உள்ளவரை அதைக் கற்பிதம் என்று முன்மொழியும் அடிப்படையில், இந்த உலகை சுரண்டும் கோட்பாட்டின் பல் வேறு வடிவங்களேயொழிய விடுத லைக்கான தத்துவமல்ல.

அடுத்து ரவிந்திரன் கட்டுடைக்கும் கோட்பாட்டைப் பார்பபோம்.

"" எதிர்மறைகளின் கவர்ச்சி "" என்ற விதி இயற்கை விஞ்ஞானம் சார்ந்தது. பெண் மீதான கவர்ச்சியோ பாலியலை மையமாக வைத்துப் பின்னப்பட்டது. (அது இயற்கையாய் பெறப்பட்டது அல்ல.) பாலியல் சம்பந்தப்பட்ட கண்ணோட்டம் இனவுற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது. இதனா லேயே ஆண் பெண் எதிர்பாலுறவு மட்டும் ஏற்கப்பட்டது, இயற்கையானது. எனக் கற்பிதம் செய்யப்பட்டது. ஓரினச் சேர்க்கை இயற்கைக்கு மாறான-தாகக் கற்பிதப்படுத்தப்பட்டது, மறுக்கப்பட்டது. மறைவிடத்துக்குத் தள்ளப்பட்டது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் மனிதர்கள் இல்லையா?" எனக் கேட்டு எழுதும் ரவீந்திரனின் இந்த வாதம் ஒன்றுக்கு ஒன்று முரணா கிப் போய்விடுகிறது ஏன்? ரவீந்திரனின் கூற்றில் இயற்கை விஞ்ஞானம் சார்ந்த எதிர்மறை கவர்ச்சி பாலியல் சம்பந்தப் பட்ட கருத் தோட்டம் இனவுற்பத்தியை அடிப்படை யாகக் கொண்டது என சரி யாக வாதிட்ட பின் பாலியலை ஓரினச் சேர்க்கைக்குப் பொருத்த முனைவது முரண்பாடானது போல ஓரினச்சேர்க் கைக் கோட்பாட்டின் தோல்வியும் ஆகும்.

இயற்கையின் எல்லா உயிரினத்தின் மூலமும் ஒன்றே ஆகும். அதன் பி-ளவுகள் பரிணாமத்தால் அமைந்த போது, உயிரியல் விதி இனப் பெருக்ககத்தைக் கோருகிறது. இதன் விளைவாக மனிதனில் ஆண் பெண் இனப் பெருக்க அடிப்படை வேறுபாடு இயற்கையில் பரிணமித்தது. இந்த ஆண் பெண் உறவினூடாக இனவிருத்தியைத் தூண்ட உருவான உணர்ச்சியே இன்ப மாகும். தூண்டப்படும் உணர்ச்சி ஆண் பெண் கலவியைத் தூண்டுகிறது. இது இயற்கை விஞ்ஞானமாக உள்ளது. பின்னால் பாலியலாக உருவாக்கி நுகர்வாக மாற்றிய போதுதான் பாலி யல் நுகர்வுக் கலாச்சாரம் தோற்றப் பெ-றுகிறது. ஆண் பெண்ணுக்கு இடையில் ஏற்பட்ட இயற்கையான இனவிருத்தி உணர்ச்சி இன்று நுகர்வுப் பண்டமாக மாறியுள்ளது. இந்த நுகர்வு இயற்கை யை மீறிய நுகர்வாக அதிகரிக்கும் போது, இயற்கையின் தேர்வை அழிக்கின்ற வகையில் மாறிவிடுகின்றது.

இரவீந்திரன் கூறும் இனப் பெருக்கப் பாலியல், பின்னால் ஓரினச் சேர்க் கைக்கும் நுகர்வுப் பண்டமாக எப்படி தடம் புரண்டது என்பதைக் கூறிவிளக்க முடியவில்லை. ஓரினச் சேர்க்கை எப்படித் தோன்றியது ? இது ஆணாதிக் கத்தின் கொடையே ஒழிய மனித சுதந்திர வேட்கையின் விளைவுகள் அல்ல.

ஆணாதிக்கம் ஆண் பெண்ணுக்கு இடையில் ஏற்படுத்திய பிளவுதான் ஓரினச் சேர்க்கையின் தொடக்கப் புள்ளி. ஆண் பெண்ணுக்கு இடையில் இயற்கையாக இருந்த உணர்ச்சி இனப் பெருக்கத்துடன் தொடர்புடைய தாக இருந்தது. மனித குல வரலாற் றில் ஆண், பெண்ணுக்கு இடையில் இருந்த சுதந்திரமான இனப் பெருக்க முறையை சுரண்டலுடன் ஆணாதிக்கம் தனக்குச் சாதமாக்கிய போது, ஆணுக் கும் - பெண்ணுக்கு இடையில் இருந்த சுதந்திரமான இனப் பெருக்க உணர்ச்சி யும் முடிவு வந்தது. இனப் பெருக்க உணர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடக்கப்பட்டது. இந்நிலையில் அந்த ஆண்பெண் ஓரினச் சேர்க்கையைத் தேர்ந்தெடுக்கும்(சமரசமாக ஆணாதிக்கத் துடன்) முதல்படியைக் கைக் கொண்டனர்.



அத்துடன் உருவான அரசுகள் தமது குடிமக்களைக் கட்டுப்படுத்தவும், அயல் அரசுகளை அடக்கவும் என ஆண்களைக் கொண்ட நிரந்தர இராணு வத்தை உருவாக்கியது. அத்துடன் ஆண்களின்றித் தனிமையில் பெண்களை ஆயிரக்கணக்கில் அந்தப்புரங்களுக்கு இட்டுச் சென்றனர். இந்த ஆண் பெண் கள் தமது இனவிருத்தியின் உணர்ச்சிக ளை தீர்த்துக் கொள்ள முடியாத ஆணாதிக்க சுரண்டல் சமுதாய அமைப்பில், இச் சமூக அமைப்புக்குள் சமரசம் செய்வோர், ஓரினச் சேர்க்கை யில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

அந்த அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவதற்குப் பதில் இச் சமூகத்துக் குள் - ஆணாதிக்கத்துக்குள் - ஒரு மாற்றுதலை வந்தடைந்தது. பாலியல் மறுக்கப்பட்ட சமூகம் உண்மையில் போராடி இருக்க வேண்டியது இனவிருத்திக்கான உணர்ச்சியைப் தீர்த்துக் கொள்ளும் போராட்டத்தையே முன்னெடுத்துக் திருக்கவேண்டும். இதைவிடுத்து ஆணாதிக்க சமூகத்துக்குள் சமரசம் செய்யும் போக்கு... இதில்தான் ஆண் பெண் சமுதாயத்தை மீறிய ஒழித்த உறவைக் கொண்டது.

ஓரினச் சேர்க்கை ஆணாதிக்கம் கொடுத்த பரிசுகளே! அதைத் தங்கத் தட்டில் ஏந்தும் ரவீந்திரன் அ. மார்க்ஸ் அதை நியாய்ப்பபடுத்தி போருடவும் செய்கின்றனர். அதற்கான தீர்சபாணைந களையும் எழுதுகின்றனர். இந்த ஆணாதிக்கத்தினை நாம் எதிர்த்து போராடுவது ஒரு சமூகப் பற்றாளனின் பணியாகும். அது மட்டும் சரியான கோட்பாட்டுத் தத்துவமாகும். ஆணா திக்கம் பெண்களை கொடுமைப்படுத்து வதற்கு எதிராக மட்டுமானதுதான் போராட்ட அல்ல. அதன் பக்க விளளை வுகளையும் எதிர்த்துப் போராடுவதாகும். ஆண் பெண் உறவுதான் இயற்கையின் தேர்வு. இதை மறுக்கும் இரவிந்திரன் இயற்கை விஞ்ஞானப்படி அதை நிறுவ முடியுமா? ஆண் - பெண் இனப் பெருக்கம் இயற்கைத் தேர்வு, அதன் உணர்ச்சி இயற்கையின் விளைவு, இதை மறுக்கும் ரவீற்ந்திரன் அது "இயற்கையால் பெறப்பட்டது அல்ல." என்று கூறுவது விஞ்ஞானத்திற்கப் பாற்பட்டது. இப்படிக் கூறியபடி "ஓரினச் சேர்க்கையை இயற்கைக்கு மாறான-தாகக் கற்பிக்கப்பட்டது" என்பதனூடாக ஆணாதிக்கத்தின் தோற்றத்தை, அதன் விளைவுகளைப் பொத்தி பாதுகாக்க முனைப்பு பெற்றுள்ளனர்.

இப்படியாகப் பல கருத்துக்கள் ரவீந்திரனின் கட்டுரை முழுவதிலும் அடங்கியுள்ளது. இனி இந்த கருத்தை யொத்த யமுனா ராஜேந்திரனின் கருத்துக்களைப் பார்ப்போம்:-




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"" பெண்ணிலைவாத உளவியல் பகுப்பாய்வு விமர்சனம் "" கட்டுடைப்பு விமர்சனம் போன்ற முறையிலான அணுகுமுறைகள் பரவலாக இடம் பெறவில்லை. ரவிக்குமாரின் 'நாக் அவுட்' பற்றிய விமர்சனமும் அ.ராமசாமியின் சில விமர்சனங்களும் தமிழில் இந்தக் கூறுகளைக் கொண்டிருக்கின்றது "" என யமுனா ராஜேந்திரன் கூறுகிறார்.

இவர் கட்டுடைப்பைக் கோருகின்றார். இருக்கும் சமுதாயத்தைதக் கட்டுடைத்த சமுதாயத்தைக் கோர வேண்டும் என் கிறார். இருக்கும் நிலப்பிரபுத்துவ பெண்ணடிமைக்குப் பதில் ஏகாதிபத் திய உலக அரசு, தேசிய உற்பத்திக் குப் பதில் பன்னாட்டு நிறுவனங்கள் என எல்லாவற்றிற்கும் கட்டுடைக்க கோரு கின்றார். ஏகாதிபத்தியம் இன்று கோருவது என்ன? இருக்கும் எல்லைதாண்டி வெளியே வா! இருப்பதைக் கட்டுடை!! மொழியா , மதமா, தேசப் பொருளாதாரமா, நட-னமா, ஆண்பெண் உறவா, எதுவாக இருந்தாலும் அதனைக் கட்டுடைத்து வெளியில் வா என்கிறது. இந்தக் கட்டுரை. சமூகமீறலை முற்போக்காக



காட்டுவதன் மூலம், இருக்கும் பிற்போக்கு சமூகமீறலை முற்போக்கா னதாக மட்டுமே இருக்கும் என்று கூறுவதன்மூலம், இந்த சமுதாயத்திற் குள் இருத்தி வைத்திருக்கும், இந்த சமுதாயத்தைப் புரட்டிப்போடும் முயற்சியைத் தடுக்கவும், கட்டுடைப்பு கோரப்படகிறது. நிலப்பிரபுத்தவப் பெண்மைக்குள் ஏகாதிபத்திய ஆட்டம் ஆடுவதும் மடோனாவுடன் இந்திய கலாச்சார ஆண் ஆடுவதும் கூட கட்டுடைப்புத்தான். இதிலிருந்து தான் இவர் பம்பாய் என்ற இந்துவத்தை பாதுகாத்த திரைப்படத்தையும், இந்திரா என்ற சாதி அமைப்பைப் பாதுகாத்த திரைப்படத்தையும், இந்தியன் என்ற இந்திய ஆக்கிரமிப்புப் படத்தையும் நியாயப்படுத்த முடிந்தது. இதேபோல் இவரது ஏனைய திரைப்பட விமர்சனங்களும் அதில் இருக்கும் ஒரு சில மீறலை கட்டுடைப்பைக் காட்டியே செய்ய முனைகின்றார். இந்தக் கட்டுடைப்பு என்பது அடிப்படையில் இந்த வர்க்க உலகத்தைப்பேண முனை யும் அதே நேரம், இந்த சமுகத்தை ஓரளவுக்குத் முற்போக்காக சித்தரிப் பதன் மூலம் இவர்கள் செய்வது, சமூகத்தைக் கடந்து செல்வதாகக் காட்டி அதைப் பேணமுயல்வதாகும். இருக்கும் ஆணாதிக்க சமுக ஒழுங்கில், ஒரு பெண் அதை மீறி வெளியில் வரும் போது அப் பெண் ஆணாதிக்கத்திற்கு எதிரான சமுக அமைப்பை கோருவது சரியானது. மாறாக கட்டுடைத்து விபச்சார ஏகாதிபத்திய சீரழிவைக் கோருவது, இந்த ஏகாதிபத்திய கனவுக் குள் நீடிக்கும் இனித்த ஆணாதிக்கத் தொடர்ச்சியுமாகும். ரவிக்குமாரை உதாரணமாகக் காட்டும் யமுனா, பார்ப்பனிய 'இந்திய ருடே'யைக் கிழித்து மலம் துடைத்து... கலகம், இறுதியில் கட்டுடைத்த போது... அதே கையால் இந்திய ருடேக்கு எழுதிய போது, பார்பனியத்தை கட்டுடைத்த ரவிக்குமா ரின் புகழ் மேன்மைக்குரிய பார்ப்பனியம் தான். யமுனா ராஜேந்திரன் வேறு இடத்தில் அழகு வேறு கவரச்சி வேறு ரேயின் படங்களும் பாலுமகேந்திராவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படங்களும் டி. ராஜேந்தரின் படங்களும் அவர்கள் சித்தரிக்கும் பெண் விம்பங்க ளும் இருக்கும் வித்தியாசங்களை உணர முடியுமானால் அழகு, கலா பூர்வ கவர்ச்சி போன்றவற்றிற்கான நடைமுறை வித்தியாசத்தை அறிய முடியும் என ஒரு நடைமுறை விளக் கத்தை இவர் தர முயலுகின்றார். இவர்கள் மூவரின் படங்களும் குறிப்பாக ஸத்யஜத்ரேயின் படம் உப்பட ஆணா திக்க சுரண்டலை பேணும் பெண் அழகியல் எல்லைக்குள் அமைந்ததே. சமுதாயக்கலகத்தைக் கோராத அதன் எல்லைக்குள் குறிப்பாக நடுத்தர வர்க்க எல்லையைத் தாண்டியவை அல்ல இம்மூவரின் படங்களும். இங்கு அவர்கள் குறிப்பிடும் அழகு கலாபூர்வம், கவர்ச்சி என்பன ஒரே அளவுகளில் செயல்படுத்தப்படுகின்றதே ஒழிய வெவ் வேறுதளத்தில் அல்ல. பண்பியல் மாறுபாடு மட்டுமே உண்டு. ஆணாதிக்க ஆண்களின் அழகு எதுவோ அதைக் கொண்ட பெண், மூவருடைய படங்க ளிலும் பவனி வருகிறாள் இந்த ஆணாதிக்க அழகு கொண்டிராத ஒரு பெண்ணை இவர்களால் படம் பிடிக்க முடியவில்லை ஏன்.? ஒரு ஏழையின் மார்புகச்சையின்றிய முகப்பொலிவின்றிய வாழும் வாழ்க்கை புறத் தோற்றத்தை யோ அல்லது அக உண்மையோ ஸத்ஜித் ரேயினால் கொண்டுவர முடிய வில்லை. ஒரே பெண், ஆனால் அதன் புற, அக உண்மையை நிராகரித்து ஒரே மாதிரியான நடிகைகளை மூவரும் தமது திரைப்படங்களில் கொண்டு வருகின்றனர். இதற்கு கொடுக்கும் வெவ்வேறு மாற்றம் சில பண்பியல் வேறுபாட்டைக் காட்டுகின்றது. ஆனால் இந்திய வெவ்வேறு ஆணாதிக்கப் பிரிவுகளில் இவை தனித்தனியாக ஒன்றாக ரசிக்கப் படுபவை. வெவ்வே றானது என்பது பொய்யானவை. பண்பியல் வேறுபாட்டைத் தவிர அதன் வெளிப்பாடு ஒன்றே. அடுத்த வரியில் அதை விரிவாக்கும் இவர் "ரேயின் பெண்" எளிமையான பெண் என சோடிப்பது காதுக்குப் பூச்சுத்துவதாகும். ரேயின் பெண் ஒரு நடுத்தரவர்க்கப் பெண். நடைமுறை வாழ்வில் சமுக அந்தஸத்தில் உயர்ந்த இடத்தில் வாழும் தசைப்பிடிப்பான முகத்தில் எண்ணை வடியாத, நகம் உடையாத, கழுத்துத் தொங்காத, மார்பு தொங்காத, காய்ந்து போகாத கால்களையுடைய பெண்தான் ரேயின் தெரிவும். இதுதான் ஆணாதிக்க அழகியலின் மையம் .

இயற்கையில் 90 வீதமான பெண்கள் உழைத்து உழைத்து எண்ணை வடியும் முகத்தடன் கைகள் மரத்துப் போய் ஒட்டிய வயிற்றுடன் கால்கள் எலும்பு களாகி தலையிழுக்காது மயிர் தடித்துப் போன புறவடிவம் உடையவர்கள். அப் பெண்ணின் உன்னத போர்க்குணத்துடன், சோகத் துடன் கொள்ளையடிப்பதற்கு எதிரான குரலுடன், ஆணாதிக்கச் சுமைகளுடன் உள்ளவை. ஆனால் ரேயின் பெண் உழைக்காத வசதியான மேல்மட்ட பெண்ணுக்கு சட்டை மாட்டியதுக்கு அப்பால் அதை எளிமையான பெண் எனச் சொல்லுவது யதார்த்தத்தை மறுப்பதாகும். ஏனெனில் யமுனா போன் றவர்கள் உண்மையான யதார்த்த உலகை வெளிக் கொண்டுவருவதை (ரேயைப் போல்) அவர்களிள் வர்க்க பசத்துடன் எதிர்பவர்களாவர். இவர் இன்னுமொரு இடத்தில் சிவகுமாரின் விமர்சனம் "மதம் சார்ந்த நிலப்பிரபுத் துவ அறிவியல் அழகியல் சொல் லாடல்களிலிருந்து இவர் இன்னும் தன்னை மீட்டுக் கொள்ளவில்லை" எனக் கூறுவதன் மூலம் மதம் சாராத நிலப்பிரபுத்துவம் சாராத அழகியல் உண்டு என்கிறார். அது வேறு ஒன்று மல்ல முதலாளித்தவ ஏகாதிபத்திய அழகியலே தான். பாட்டாளிவர்க்க அழகியல் என்பது கிடையாது பெண் ணுக்கு இடையில் வேறுபாட்டைபக் கோரும், மனிதரிடையே பிளவைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரும் வியாபாபார தந்திரத்தை பாட்டாளி வர்க்கம் மறுக்கிறது. யமுனா கூறும் "சினிமாக் கலையின் நுன்களத் திற்குள் விமர்சனம் அமைவது வளர்ச்சியுற்றது" என்கிறார். அது... இது... ஆழமாக பார்த்தல்... என்ற பூச்சாண்டி காட்டி மனித பிளவுகளை நியாயப்படுத்ததும் முயற்சியாகும். இதுவே இவரின் தொடர்ச்சியான சினிமா விமர்சனங்களில்( பார்க்க ஈழமுரசு ) கட்டுடைப்பைத் தேடி அதன் சாமரம் வீசும் நுண் சினிமா விமர்சனம் கண்டு, அதற்காக தங்கப் பரிசசினை வழங்குகிறார். எந்த விமர்சனமும் எந்த சமூக அடிப்படையாகக் கொண்டது என்பதே முக்கியம். மனிதனைப் பிளவுபடுத்தும் மனித இனத்துக்கு யார் எதிரியோ அவைகளை எதிர்த்த விமர்சன முறை மட்டுமே உண்மையானதும் ஆழமானதும் ஆகும். தலைகீழான மாற்றத்தை மறுத்தபடி, இருப்பதைக் கட்டுடைக்கும் இயற்கையை மறுக்கும் கோட்பாட்டு வடிவங்கள், இன்றைய உலகின் ஒழுங்கைப் பேணும் ஒரு முயற்சியின் தொடர்ச்சியாகும். இதையே ரவீந்திரனும்யமுனா ராஜேந்திரனும் செய்ய நினைக்கின்றனர் அவ்வளவே. ○

---

# துருக்கிய ஆக்கிரமிப்பாளர்கள் ஈராக்கில் புகுந்து நடத்திய படுகொலைகள்

குருஷ்டிஷ்தான் தொழிலாளர் கட்சியை அழிக்கும் நோக்கில் துருக்கிய பாசிச இராணுவசர்வாதிகாரிகள் தமது எல்லையைக் கடந்து ஈராக்கினுள் புகுந்து தாக்குதலை நடாத்தி 998 பேருக்குமேல் படுகொலை செய்துள்ளதுடன், தொடந்து ஆக்கிரமிப்பை நடாத்திவருகின்றனர்.

உலகில் மனித உரிமை மீறலில் அதிகளவு ஈடுபடும் முதல் நாடு துருக்கிதான் என 1997 ஆம் ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் சங்கம் தனது அறிக்கையில் அண்மையில் வெளியிட்டிருந்தது.

அந்தளவுக்கு மனித உரிமைமீறலில் ஈடுபடும் துருக்கி தனது எல்லையைக் கடந்து ஈராக்கினுள் புகுந்த போது கூட, ஜனநாயகக் காவலர்கள் ஏனோ தானோ எனக் கண்டு கொள்ளவில்லை. ஏன்?

துருக்கியில் திறந்த சந்தை உள்ளவரை அங்கு மனித உரிமை மீறல் என்பது கேள்விக்குரியது அல்ல என்பதே ஜனநாயக ஏகாதிபத்தியத்தின் நிலை. ஆனால் வடகொரியா, கியூபா , சீனா , லிபியா போன்ற நாடுகள் அகலத்திறந்த சந்தையை தக்க வைத்திருக்கும் வரை அங்கு மனித உரிமை மீறல் என்றும், சர்வாதிகாரப் போக்கு எனவும் நாம் கூறுவோம் என்பது ஏகாதிபத்திய அகராதி.


ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம் இந்த மனித உரிமைக்குப் பின் உள்ள மோசடியைக் கபடத்தை இனம் கண்டு கொள்ளுவதன் மூலம் இவர்களின் நோக்கத்தைத் தவிடு பொடியாக்க முன்வரவேண்டும்.

துருக்கிய ஆக்கிரமிப்பாளரால் சுட்டுக் கொல்லப்பட்ட குருடிஸ் மக்களுக்கும் போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கத் தயங்கக் கூடாது. அதேநேரத் ஆக்கிரமிப்பாளனுக்கு எதிரான போரை முன்னெடுக்கும் குருட்டிஷ் தொழிலாளர்கட்சிக்கு எமது கரங்களை உயர்த்தி ஆதரவு தெரிவிப்பது எமது சர்வதேசக்கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நடுநிலையின் பெயரால் நிதிஉதவி வழங்கி 2ஆம் உலக யுத்தத்தை நடாத்திய சுவிஸ்

2ஆம் உலகயுத்தம் வெறும் நாசிக் கட்சியின் தனித்துவமான விளைவல்ல. மாறாக மேற்கு நாடுகள் நாசிக்கட்சிகள் ஊக்குவித்து யுத்தத்தைத் தொடங்க எல்லாவித உதவிகளையும் வழங்கினர். இதன் பின்னணியில் கம்யுனிச ஒழிப் பும், சோவியத்தின் மீது தாக்குதலைத் தொடுத்தல் என்ற கனவுகளைக் கொண்டு மேற்கு நாடுகள் ஜெர்மனிய நாசிகளை பலப்படுத்தினர். நாசியுத்தம் மேற்கு நாடுகளின் காலனிகளைக் கோரிய போதிலும் தமக்கிடையில் அவற்றைப் பங்கிட்டும் விட்டுக் கொடுத் தும் சோவியத் மீதான தாக்குதலை ஊக்குவித்தன.

சோவியத் யூனியன் பகிரங்கமாக நாசிகளுக்கு எதிரான ஐக்கிய முன்ன ணி கோரிக்கையைத், தொடர்ச்சியாக மேற்கு ஜனநாயகவாதிகள் நிராகரித்து ஜெர்மனிய நாசிகளுடன் சமரசம் கண்ட னர். இந்நிலையில் விழித்துக் கொண்ட சோவியத் ஜெர்மனியுடன் போர்தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து யுத்தத் தைத் தவிர்த்துக் கொள்ள முனைந்தது. இந்நிலையில் யுத்தம் மேற்கு நாடுக ளுக்கு நகர்ந்தது. யுத்தம் மேற்கு நாடுகள் புகும் எனக் கனவு காணாத மேற்கு அரசுகள், யுத்தத்தைத் தடுத்து நிறுத்த கோரிய சோவியத்துடன், காலம் தாழ்த்தியே ஐக்கியத்திற்கு முன்வந் தனர்.

இந்நிலையில் ஜெர்மனி யுத்தத்தை நடத்த தேவையான பணத்தையும் வளத்தையும் பெற்றுக் கொள்ள , ஜெர்மனி சுவிஸ் என்ற நாட்டை நடு நிலையாக விட்டு வைத்தது.

சுவிஸ் நடுநிலையின் பெயரில் ஜெர்மனிக்குத் தேவையான வளத்தை வாரி வழங்கியது. நாசிகளினால் படுகொலை செய்யப்பட்ட பல இலட்சக் கணக்கான யூதர்களின் சொத்துக்களை பெற்றுக் கொண்டு அதற்குப்பதிலாக யுத்த தளபாட உதவியை வாரிவழங்கி யது. இந்த வகையில் அண்மையில் சுவிஸின் சதிதிட்டம் அம்பலமாகி யுள்ளதுடன், பல நாசிகள் கொள்ளையடித்துப் பதுக்கி வைத்து இருக்கவும் உதவி வழங்கியதுடன் யுத்தத்திற்குப் பின் அதைக் கடத்திச் செல்லவும் துணைசெய்தது அம்பலமா கியுள்ளது. உலகின் பல

மோசடிக்காரர்களினதும், போதைவஸ்து கடத்தல்காரர்களினதும் பணத்தை பதுக்குவதில் எந்த இலக்குமின்றி ஜனநாயகத்தின் பெயரிலும் சுரண்டலை நியாயப்படுத்தும் கோட்பாட்டின் அடிப்படையிலும் தொடர்கிறது. இதைப்பதுக்கிப் பாதுகாக்கும் கொள்ளைக்காரர்கள் உலகம்தான் இன்று உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆணாதிக்கத்தை எதிர்த்து, வர்க்க போரைக் கோரும் கவிதை

# கலாவினுடையது

சரிநிகர் 123 இல் "" கோணேஸ்வரிகள் "" என்று தலைப்பிட்டு கலா ஒருகவிதை எழுதியிருந்தார். இக்கவிதையைத் தொட்டு பல விமர்சனங்களை சரிநிகர் எதிர் கொண்டு சிலவற்றை வெளியிட்டு இருந்தனர்ஆணாதிக்கம் இனவாதத்து டன் இணையும் போது ஒரு தமிழ் பெண் சந்திக்கும் இனவாத ஆதிக்கத் தை மிக அருமையாக துல்லியமாக படம் பிடித்து கலா காட்டிருந்தார். இதன் மூலம் சமுகத்தின் இயலாமைக் கு சவால்விட்டுள்ளனர். அதை நேரம் இனவாதம் சிங்களப் பெண் மீதான இராணுவ வன்முறையை ஒத்தி வைத் துள்ளதை அழகாக சுட்டிக் காட்டுவதன் மூலம் இலங்கை அரசியலை சரியாக மிக நேர்த்தியாக சுட்டிக் காட்டுகின்றது இக்கவிதை.

ஆனால் பெண் அமைப்பாளர்கள், ஜனநாயகவாதிகள், பெண்கள் பத்திரி கையாளர்கள் எனக் கொஞ்சப் பேர் இதை எதிர்த்து அழுதுவடிந்துள்ளனர். தம்மீது கட்டமைக்கப்பட்ட ஆணாதிக்க நிலையில் நின்றும், இனவாதக் கட்ட மைப்பில் மீதும் நின்றும் நடத்தும் வன் முறையை ஒரு பெண்ணின் மீதான கொடுமையை சரியாக சுட்டும் போது எதிர்த்துப் புலம்பியுள்ளனர்.

காலம்காலமாக நடக்கும் இனவாத சாவு அதிரவைப்பதில்லை. உணர்வுகள் மரத்துப் போகின்றன. சமாதானத் திற்காகப் போராடமுடியாத அரசியல் குரோதத்தில் முடங்கிப் போகும் போது நீங்கள் நிர்வாணமாக ( உடல் . இனவாத அடிப்படை எப்படியாயினும் ) இருப்பதுதான் உங்கள் நிலை புத்தரின் பேரால் சமாதானம் பேசுகின்றனர். ( இங்கு புத்தரை அல்ல) யுத்தவாதிகள் அவர்களின் ஆணாதிக்க வக்கிரத்தை தீர்க்க யோனியை அரசியல் அற்ற நிதர்சனமானதென்றாலும், சமுகமும் ஆணாதிக்கத்தில் யோனியைத் திறந்து தான் வைத்திருக்கும் யதார்த்தில்.

பிறக்கும் குழந்தையை வக்கிர அடை யாளத்தை அதன் எழுச்சியையும் சிதைக்க யோனியின் உள்வைத்த கைக்குண்டு, பெண்ணின் உறுப்பு மீது இந்தச் சமாதானவாதிகளின் கருனை நாளை சிங்களப் பெண்கள் மீது பாயத் தயாராக உள்ளனர். இதுதான் கவிதை யின் அடிப்படை. வளருட்டும் கலா வின் கவிதைகள் மலரட்டும் பலவாக. ஆணாதிக்க அதிகார இனவாதிகள் மட்டும்தான் இதற்கு எதிராக ஊழையி டுவார்கள். பண்பாடு என்பர். பெண்மை என்பார்கள். ஆபாசம் என்பார்கள். ஏன்னெில் ஆணாதிக்க ஒழுக்கம் இவையல்லவா? இதை எதிர்த்துப் போராட அழைப்புவிடுகிறார் கவிதை மூலம் இதை சமாதானத்துக்காகவா செய்தீர்கள்? எனக் கேட்க இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனவாதக் காய்ச்சலை உண்டாக்கிறது. அருவருப்பு உணர்ச்சியை தருகிறது என்கிறார் பெண்ணிலைவாதி செல்வி திருச்சந்திரன். நாகரீகம் தாண்டிய கவிதயாம். ஆணாதிக்க, இந்த உலகச் சார்ந்த நாகரீகத்தை கோரும் செல்வி திருச்சந்திரன். யோனி, நிர்வாணம் என எழுதுவது அவமானம் என்கின்றனர். உயிரியல் படிக்கும் ஆண் பெண் மருத்துவம்படிக்கும் ஆண், பெண் இதை யதார்த்த மாய் கேட்கின்றனர். சொல்லுகின்றனர். அருவருப்பாக அல்ல. ஆனால் ஆணாதிக்க சமுகம் பெண்ணைப் பொத்தியதைப் போல் இதைப் பொத்தி மூடி மறைத்து அநாகரீகம் எனக் கூறுவதன் மூலம், அந்தப் பெண்ணை யோனியையில் பாலியல் வல்லுறவுக் குட்படுத்துவதை மூடி மறைத்து நியாயப்படுத்துகின்றது. இதையுத்தம் மீது செய்வதை மறைத்து, யுத்தத்தை சமாதானத்தின் பேரில் பாதுகாக்க முனைகின்றனர்.

# கோணேஸ்வரிகள்....!

நேற்றைய அவளுடைய சாவு - எனக்கு
வேதனையைத் தரவில்லை.
மரத்துப் போய்விட்ட உணர்வுகளுக்குள்
அதிர்ந்து போதல் எப்படி நிகளும்.

அன்பான என் தமிழச்சிகளே,
இத்தீவின் சமாதானத்திற்காய்
நீங்கள் என்ன செய்தீர்கள்!?
ஆகவே: வாருங்கள்
உடைகளைக் களற்றி
உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்
என் அம்மாவே உன்னையும் தான்.

சமாதானத்திற்காய் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்
உங்கள் யோனிகளைத் திறவுங்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாவம்,
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்.

வீரர்களே! வாருங்கள்
உங்கள் வக்கிரங்களை தீர்த்துக் கொள்ளுங்கள்.
என் பின்னால்
என் பள்ளித் தங்கையும் உள்ளாள்.
தீர்ந்தா எல்லாம்
அவளோடு நின்றுவிடாதீர்!
எங்கள் யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்.
ஆகவே:
வெடிவைத்தே சிதறடியுங்கள்
ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளி
புதையுங்கள்
இனிமேல் எம்மினம் தளிர்விடமுடியாதபடி.

சிங்கள சகோதரிகளே!
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலையில்லை.

-கலா-

17.05.1997 அன்று பத்து பொலிசாரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு, பெண்குறியில் கிரனைட் வைத்து கொல்லப்பட்ட மட்டக்களப்பு 11ம் கொலனி யைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய்.

நன்றி:- சரிநிகர்.



www.tamilarangam.net

# சனநாய அமெரிக்காவின் உலக சனநாயகம் காக்கும் இராணுவத்தில்



அண்மையில் அமெரிக்க இராணுவத்திலிருந்த அமெரிக்கப் பெண்களின் குரல்கள் மூடிமறைப்புக்களையும் மீறி வெளிவந்தபோது அது அமெரிக்காவையே உலுக்கியெடுத்தது.

அமெரிக்க ஜனநாயக இராணுவத்தில் இரண்டு இலட்சம் பெண்கள் அங்கம் வகிக்கின்றனர். இது மொத்த அமெரிக்க இராணுவத்தில் 13 வீதமாகும். இதில் 50 000 பெண்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போது 52 வீதமான பெண்கள் இராணுவத்தில் பணிபுரிந்த ஆண் இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்கு (கற்பழிப்புக்குப் பதிலாக பாலியல் வன்முறை பாவிக்கப்படுகிறது) உட்படுத்தப்பட்டிருப்பது வெளியாகியுள்ளது.

மூடிமறைத்துப் புகைந்து கொண்டிருந்த இந்த உண்மை ஜெஸிக்காவினால் பகிரங்கமாகியுள்ளது. இந்தப் பெண்ணை பாலியல்வன்முறைக்குட்படுத்திய உயர்-அதிகாரி மூன்று பெண்களை ஒன்பது தடவை பாலியல் வன்முறைக்குட் படுத்திய விடயமும் தற்போது அம்பலமாகியுள்ளது.

இச்சம்பவத்தை பற்றிய விசாரணை-களை நடாத்தவும், இலவச தொலைபேசி சேவையை ஏற்படுத்தியபோது 3930 தொலைபேசி அழைப்புக்கள் வந்திருந்தன. அநேகமான வன்முறைகள் உயர்-அதிகாரிக்கும் பயிற்சிக்கு வந்த பெண்களுக்கும் இடையிலானவையாக இருந்துள்ளது. கட்டாய இராணுவ சேவையை வலியுறுத்தும் ஆணாதிக்க வெறியர்களுக்கு இப் பெண்கள் இனிப்பான பொம்மைகளே.

இந்த இராணுவம்தான் உலகில் சிறந்தது. இந்த இராணுவம் தான் உலகஜனநாயக காவலன். இதுதான் உலகப் பொலிஸ்காரின் ஜனநாயகம். ஆக்கிரமிப்புக்குள்ளாகும் நாட்டுப் பெண்கள் இவர்களிடம் சிக்கினால் சிட்டுக்குருவிதான்.அதுபலாத்காரமாகவும் விபச்சாரமாகவும் மாற்றும் வித்தை வல்லமைதான் உலகப்பன்னாட்டு முதலாளிகள் இவர்களுக்கு கொடுக்கும் பரிசு.

பன்னாட்டு முதலாளிக்கும் உலக கொள்ளையடிப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் பதிலீடாக ஆக்கிரமிப்பு நாட்டுப் பெண்கள் உட்பட சொந்த நாட்டுப் பெண்களையும் ஜனநாயத்தின் பெயரால் வன்முறைசெய்ய உதவும் . அதைமறைக்கவும் முயலும் அமெரிக்க கனவுகளை நனவுகளை நாம் வேறுப்பது எப்போது என்பதே எம்முன் உள்ள ஒரே கேள்வியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏகாதிபத்தியத்துடன் நடக்கும் சிங்கள இனவெறி தாக்குதல்




# முட்டுச் சந்திக்கு நகர்த்தியுள்ளது

தமிழ் இன அழிப்பை சந்திரிகா அரசு தலைமையில் வேகப்படுத்தும் வகையில் சமாதானத்திற்கான யுத்தம் என கூறிய படி சிங்கள் இனவெறி காட்டுத்தாபார் கட்டவிழ்த்து விட்டுள்ளது. யாழ் நோக்கிய முன்னேற்றத்தாக்குதல்கள் தமிழ்மண்ணை மேலும் மேலும் கூறு போடுதல் பொருளாதாரத்தடை , கலாச் சாரச்சிதைவு, பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் , சொத்துக்களை எரித்து சுடுகாடாக்குவது என என்னவெல்லாம் செய்ய முடியுமோ எல்லாவற்றையும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது சிங்கள இனவாதிகளால். பெண்களைப் பாலியல்வதைக்குட் படுத்திவிட்டு புலிகளின் உறுப்பினர்களாக்குவது, சிறையில் தள்ளுவது , காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்ப்பது, மோதலில் இறந்தவர்களாக் குவது புதைப்பது, பெண்உறுப்புக்குள்ளே குண்டுவைத்துத் தகர்ப்பது, எனத் எதைச் செய்ய முடியுமோ அதையெல்லாம் ஆணாதிக்க இனவெறியர்கள் கையாளுகின்றனர். இதை விசாரிக்க ஜனாதிபதி சந்திரிகாவின் ஆணைக்குழு ஆணாதிக்கவாதிகளைப்பாதுகாக்க இனவாதிகளை நியாயப்படுத்துபவர்களாக அப்படியெதுவும் நிகழவில்லை அல்லது தாமாகவே நிகழ்ந்தன என அறிக்கை எழுதிக் குவிக்கின்றன.

ஆம் தமிழ் இனம் சூறையாடப்படுகின்றது. பௌத்தத்தின் பெயராலும் சிங்களமொழியின் பெயராலும் தமிழ் தேசம் பந்தாடப்படுகின்றது. தாக்குதல்கள், கொல்லப்பட்டோர் எண்ணிக்கை என கணக்கு வழக்கு இன்றிய அறிக்கைகள் சிங்கள இனவாதத்திற்கு வருடிக் கொடுக்கின்றன. வக்கிரத்த இராணுவ வெறியர்கள். அவசரகாலச் சட்டத்தின்

www.tamilarangam.net

கீளும் பொலிசிலும் தமிழ் இனம், தமிழ் குடிமகனாக இலங்கைச் சட்டத்தால் பாதுகாப்பு பெறமுடியாத அந்நியனாகிவிட்டான்.

ஒரு நாடு என்பது அதன் குடிமக்கள் எல்லோருக்கும் இருக்கும் சட்டக் கட்டமைப்பை பாதுகாக்கின்றது. இந்த அமைப்பு ஒரு இனத்துக்குப் பாதுகாப்பை வழங்க மறுக்கும் போது பாதுகாப்பிற்காக இனம் போராடுவது தவிர்க்கமுடியாது. சந்திரிகா தனது இனவாத கொட்டத்தின் தொடராக தீர்வுப் பொதிகளை தமிழ் இனத்திற்கு எதிராக முன்வைக்க முனைகின்றார். சிங்கள் இன மேலாதிக்கவாதிகள் தமிழ்மக்களுக்கு தீர்வு பொதி வைப்பது எனில் அது தமிழினத்தின் சுயநிர்ணயத்தைத் தோண்டிப்புதைப்பதாகும்.

புலிகளின் மக்கள் விரோதத்தைவிட சிங்கள இனவாத பாசிசம் காட்டுத் தர்பார் மொத்த தமிழ் மக்களுக்கு எதிரானது மட்டுமின்றி தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க முனைப்புப் பெற்றதுமாகும். புலிகளின் போராட்டமும் அதன் அரசியல் வங்குரோத்தும் தமது ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் சரி அல்லது எல்லைப்பிரதேசத்தில் சரி ஒரு வரையறுக்கப்பட்ட சட்ட ஒழுங்குகள் நிர்வாகத்தைக் கொண்டிராதது மட்டுமின்றி ஒவ்வொருவரும் தாம் விரும்பியதைச் செய்யும் புலிகளின் கோட்பாடுக்கு உட்பட்டதாகவே உள்ளது. பரந்துபட்ட மக்களுக்கு தொடர்ச்சியான அச்சத்தை பீதியை ஏற்படுத்திய வண்ணம் இது உள்ளது.

மறுபுறம் சிங்கள இனவாத அரசுக்கு இராணுவத்திற்கு எதிரான அனைவரின் கருத்துச் சுதந்திரத்தை அங்கீகரித்துப் போராடவேண்டிய புலிகள் தமது குறுகிய பார்வை மூலம் இராணுவ வாதத்திற்குள் நின்று, அரசுக்கு எதிரானவர்களை வேட்டையாடுவதும் தொடர்ந்தும் அதில் ஈடுபடுவதும் இனவாத அரசுக்கு சார்பாகவுள்ளது.

ஓர் இனத்தை அழிக்கும் போது, மற்றைய இனங்கள் அதன் மீதான அநுதாபத்தைப் பங்களிப்பை பெறுவதற்குப் பதில் , புலிகளின் குறுகி பார்வை அவர்களை விரட்டியது மட்டுமின்றி சிங்கள இனவாத அரசு போல் இவ்வினங்களைத் தாக்கி ஒடுக்கியது. இதன்மூலம் முஸ்லீம் மக்கள் , சிங்கள மக்களை அந்நியப்படுத்தியது மட்டுமின்றி சர்வதேச ரீதியாக நடாத்திய தாக்குதல்கள் சர்வதேச ரீதியாக மேலும் போராட்டத்தைச் சிதைத்தது. சிங்கள இனவெறித் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத நிலைகளில் புலிகள் மக்களுள் குண்டுகளை வெடிக்க வைத்தன் மூலம் (கொழும்பு, எல்லைப்புறம் போன்றவை) சர்வதேச ரீதியாக ஆதரவை இழக்க வைத்தது. தேசிய இனப்போராட்டத்தை அவர்களின் தேவை முடிந்தபின் சிதைக்கும் ஏகாதிபத்திய நோக்கத்துடன் இவைகள் சாதகமானது மட்டுமின்றி, அதையும் தாண்டி தவறான நிலைக்கு நகர்த்துகிறது.

தமிழீழ தேசவிடுதலைப்போராட்டம் அரசியல் என்ற அத்திவாரத்தில் கட்ட வேண்டிய இராணுவத்திற்குப் பதில் இராணுவவாதம் என்ற அரசியல் அற்ற ஒட்டுமொத்தமான இராணுவவாதமாக சீரழிந்து போன தேசிய விடுதலைப் போர் தாக்குதல்வாதத்திற்கு மட்டும் மீளமீள தாக்குதல்களை ஒப்புவிப்பதன் மூலம் சீரழிந்து போகிறது. தமிழ் பேசும் மக்களை அரசியல் ரீதியாக வளர்த்து எடுத்த முன்னேற்ற வேண்டிய தேசியவிடுதலைப் போர் இன்று முட்டுச் சந்திக்கு வந்துள்ளது.

இனியும் அரசியல் பேசத்தேவையற்ற ஒன்றாகியுள்ளது. அதாவது கொல்லப்பட

www.tamilarangam.net





இராணுவம் பிடிபட்ட இராணுவம் காயம் பட்ட இராணுவம் கைப்பற்றிய ஆயுத எண்ணிக்கையே அரசியலாகி போனது டன் இராணுவ வன்முறையை சுட்டிக் காட்டுவது மட்டுமே தேசவிடுதலைப் போராட்டமாகியுள்ளது.

தேசியவிடுதலைப் போர் என்பது தேசிய இனத்துக்குள் உள்ள வர்க்க முரண்பாடுகள் சாதி முரண்பாடுகள் , ஆண் பெண் உறவு,, மற்றைய இனங்கள் , உலக மக்கள் என எண்ணற்ற ஒவ்வொன்றிலும் உள்ள உள்ளம்சங்கள் , முரண்பாடுகள் , உள் முரண்பாடுகள், பகுதியைப் பகுதியாக எடுத்து ஆய்வு செய்வதன் மூலம் உருவாக்கும் அரசியலில் கட்டமைக்கப்பட வேண்டும்.

ஏகாதிபத்தியத்தின் பங்கு அதன் ஆக்கிரமிப்பும் உள்ளூர் ஆளும் பிரிவுக-ளின் அரசியல், ஒவ்வொரு கட்சியின் அரசியல் , ஒவ்வொரு குழுவினதும் அரசி யல் அவைகளின் செயற்பாடுகள் அனைத்தும் தனித்தனியாகவும் மொத்த மாகவும் ஆய்வு செய்யும் அரசியல் எமக்குத் தேவை.

இதுமட்டும் தவறுகளுக்கு பதில் சரியாக மிகமிகச் சரியாக தேசவிடுதலைப் போரை முன்னெடுக்க அதை உயர்வாக வடிவமைக்க உதவும். இன்றைய இராணுவவாதத்திற்குப் பதில் அரசியல் வழியை முன்னெடுப்பது இன்றுள்ள அவசியமும் அவசரமுமான தேவையாக தமிழ் தேசிய இனத்துக்குள்ளது. இன்று இதன் முதற்பணியாக திம்புக் கோரிக்கையில் இருந்து தொடங்குவதும் அதை அடிப்படையாக இராணுவவாதத்திற்குப் பதில் முன்வைப்பது அவசியமும் அவசரமான தேவையாக எம் தேசியவிடுதலைப் போர் கோருகின்றது.

www.tamilarangam.net

# பெண்ணின் போராடும் உரிமை பெண்ணின் உயிரைக்காட்டிலும் அடிப்படையானது



சரிநிகர் 112 113 இல் ராதிகா குமாரசாமி பெண்புலிகளும் பெண்விடு தலைப் பிரச்சனைகளும் என்றதலைப்பிலான தொடர் கட்டுரைகள் வெளிவந்தன. இந்தகருத்துக்களை மறுதலித்துக் பல கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன.

ராதிகா குமாரசாமியின் அடிப்படை அரசியலைக் கேள்விக்குட்படுத்துவது க்கு பதில் பல குறைபாட்டுடன், தமிழ் மக்களின் போராடும் உரிமையின் பெயரால் எழுப்பப்பட்ட விமர்சனக் கட்டுரைகள் வெளிவந்தன. நாம் இக்கட்டுரை மீது தொடர்ச்சியாக இரு கட்டுரைகள் எழுதிருந்தபோதும் வழமை போல் சரிநிகர் அவற்றை இருட்டடிப்புச் செய்துள்ளது.

ராதிகாகுமாரசாமியின் கட்டுரைக்குப் பின் சரிநிகர் 118 இல் "" துயரம் மலையளவு தான் ஆனால் மௌனத்தைக்காத்தல் சாத்தியமில்லை "" எனப்பதில் அளித்த கட்டுரை தலையங்கத்திற்கு எதிராக அமைந்திருந்தது.

ராதிகாகுமாரசாமியின் அடிப்படை அரசியலைக் கேள்விக்குட்படுத்துவதன் மூலம் நாம் இன்றுள்ள பூர்சுவாப் பெண்ணிலைவாத பிரமிப்புக்களை உடைத்தெறிய முனைகிறோம்.

""எந்த வடிவத்திலான முரண்பாட்டையும் தீர்பதற்குப் பதிலாக பலாத்காரத்தை வழி முறையாகப் பயன்படுத்துவதற்கு நான் உடன்படில்லை "" என ராதிகா குமாரசாமி திட்டவட்டமாக தனது அரசியல் எது என்பதைத் தெளிவாக்குகின்றார்.

ஏனோதெரியாது இவர் ஐக்கியநாடுகள் சபையில் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விசேச அறிக்கையாளராக இருப்பதோ என்னவோ, அனைத்து வன்முறைக்கு எதிராக குறிப்பாக பெண்களுக்கு எதிராகத் தொடரும் வனமுறைக்கு உலகளவில் தலைமை தாங்கும் ஐக்கியநாடுகள் சபையைப் பாதுகாக்கத்தான் முதல் வன்முறையை நிராகரிக்கின்றார்.

ஆணாதிக்கம் , சாதி ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை , நிற ஒடுக்குமுறை, சுரண்டல் என அனைத்தும் வன்மு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றைசார்ந்ததே. உலகத்தின் அனைத்த இயக்கமும் வன்முறைக்கு ஊடாக கட்டியமைக்கப்பட்டுள்ளது. பொதுவில் அமைதி என்பது இருக்கும் வன் முறையைப் பாதுகாக்கும் நியாயப்படுத்தும் கோட்பாடுகளாகும்.

சமுதாயத்தில் இருக்கும் முரண்பாடு களை தீர்க்கும் வன்முறை அரசியல் இல்லை என அடித்துக் கூறும் ராதிகா அப்படியே இருக்க காலில் விழுந்து கெஞ்சக் கோருகிறார். ஒரு முதலாளியிடம் கூலியைக் கெஞ்சி யும் காலைப்பிடித்துக் கோருகின்றார். சிங்கள இனவாதிக ளிடம் தமிழீழ மக்கள் பணிந்து நின்று கேட்கக் கோருகின்றார். ஆண்களிடம் அமைதியாகத் குனிந்தபடி கெஞ்சக் கோருகின்றார். அதாவது ஒரு பெண்ணை ஆண் பாலியல் வன்முறைக்குட்படுத்தும் போது எதிர்த்துப் போராடாது அமைதி யாக வன்முறையை ஏற்று பின் பேரம் பேசி அதே ஆணைத் திருமணம் செய்ய வேண்டும் என்கிறார்.இதுதான் பலாத்காரத்திற்கு உடன்பாடு இல்லை என்று கூறியபடி செய்ய நினைப்பதாகும்.

இன்று நடைபெறும் உலகமயமாதலை பார்த்துக் கைகட்டி நினறு மூன்றாம் உலக நாடுகள் அதிக நிதி உதவி வழங்க இரங்க வேண்டும். இதுதான் ராதிகாவின் அரசியல் அகராதி. ஏகாதிபத்திய நவகாலனித்துவ ஆக்கி ரமிப்பை எதிர்த்து வன்முறை வேண்டாம் என்கிறார். மாறாக மாற்று வழி பொலிசாக நின்று சேவை செய்ய கோருகின்றார். இவர்களின் நோக்கமும் பூர்சுவாப் பெண்ணிலைவாதம் பற்றி புதிய உலகமாதலைப்பற்றியும் புரிந்து அதற்கு இவர்கள் சார்பாகக் கதைக்கப் பழகவேண்டும் என்கிறார். அது சரி பெண்கள் காலம் காலமாக போராட வில்லை என்பது ஆணாதிக்கத்திற்கு மட்டுமின்றி மதக்கோட்பாடுகளின் தொடர்ச்சியும் ஆகும். சமுகம் காட்டுமிராண்டிச் சமுகமாக இருந்த போது பெண்கள் தமது உணவுக்கும் தமது குழுவைப்பபாதுகாப்பதற்கும் ஆயுதம் ஏந்தி ஆண்களைப்போல் போராடினார்கள் என்பது உண்மையானது என எல்லாப் பெண்ணிலைவாதிகளுக்கும் தெரியும். ஆனால் இவர்களுக்கு அவை கசப்பானவை.

சங்க இலக்கியத்தில் ஆதராமாய் கேட்பது பார்ப்பனிய இந்து மதத்த லைவர்களிடம் கேட்பதும் ஒன்றே. ஆணுக்குப் பெண் அடிமையான பின் தான் சங்க இலக்கியம் உருவானது. சங்க இலக்கியத்திற்கு சற்று முன் சென்றால் பெண் ஆயுதம் ஏந்திப் போராடியதும் தலைமை தாங்கியதும் ஆவணமாகவுள்ளது. கி.மு மூன்றாம் நூற்றாண்டில் பெண் யுத்தத்தில் ஈடுபட்டதை உள்ளடக்கிய செங்கல் நூல் திரட்டில் பெண்ணின் நிலையைத் தெளிவாக்கியுள்ளது. இந்தச் செங்கல் வெட்டை அப்படியே தொகுத்த நூல் தான் "" சிநதுமுதல் கங்கைவரை "" என்ற ராகுல்ஜி நூலைப்படித்தால் ஓரளவுக்கு உண்மையான விபரங்களைப் பெறலாம்.

பெண்கள் சுதந்திரமாக வாழ்ந்ததும் தனது சமுகத்தை பாதுகாக்கப் போராடிய மனித வரலாற்றை, ஆதரங்களின்றி பெண்விடுதலையை நோக்கிச் சிந்திப்பவர்களுக்கு கூட இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் மனித வரலாற்றுத் தொடக்கம் ஆண் பெண்ணை அடக்கியதல்ல. இருவரும் சமுதமாக பெண் உள்ளிட்ட வாழ்வுப் போராட்டமாகவே இருந்தது. ஏன் மனித குல வரலாறில் பெண்கள் தான் போராட்டத்திற்கு தலைமைதாங்கி போராடிய வரலாறும் ஒரு சரியான பெண்ணிலைவாதிக்கு தெரிந்துதான் இருக்கும். ஆனால் ராதிகா போன்றோருக்கு தமது ஆணாதிக்க தலைமையைப் பாதுகாக்க பெண்ணின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமையை பறித்ததைக் கோட்பாட்டுத தளமாகக் கொச்சைப் படுத்தவது அவசியமாகவுள்ளது.

"" இரண்டாவதாக புலிகளின் ஆண் பெண் ஒருமை நிலைத்தன்தையைக் குறிப்பிடலாம். அதாவது ஆணையும் பெண்ணையும் ஒரே விதமாக செயற்றுவித்தல். இது பெண்மைக்கான சாவுமணி என்று கூறலாம்"" என ராதிகா கூறுகிள்றார். ஆண் பெண் சமத்துவத்தை மறுக்கும் போது புலிகளின் மீதான செயற்தளத்தில் மட்டுமல்ல எல்லாத் தளத்திலும் இது கருக் கொள்கிறது. நாம் புலியின் அரசியல் போராட்டவடிவம் , ஒழுங்கு அமைப்பை ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர். ஆனால் பெண்ஆண் இடையில் உள்ள இடைவெளி குறைக்கப்படும் போது அதை நாம் வரவேற்போம். பெண்கள் இன்று ஆண்களைப்போல் உள்ளனர் எனில் நாம் பெருமைப்படவேண்டும். அதற்காக ஒப்பாரி வைக்கக் கூடாது. ஒரு பெண் தலைமயிரை வெட்டி நகையின்றி உள்ளபோது பெண்மைக்கு சாவுமணி அடிக்கின்றது எனக்கூறுவது நகைப்புக்குரியது. ஏன் ஆண்கள் கூட முன்பு தலைவளர்த்தும் நகையணிந்தும் இருந்தனர். ஆண் பெண்ணுக்கிடையில் இது ஓர் அடிப்படை வேறுபாடாக முன்னைய சமுகத்தில் இருந்தது இல்லை. ஆனால் இன்று பெண்ணைக் கல்லாக்கியபோதும், அழகியல் பதுமையாக்கும் போதும்தான், இதைப் பெண்மை என்ற பெயரில் தொடரும் உண்மையான பிரிவின் நோக்கம் என்ன என்று பார்ப்போம்.

பெண் முடிவளர்த்து, காதல் உணர்வு ததும்ப ஆண்களுடன் கூடியுள்ளவரை , இந்த உலக ஒழுங்கு மாறாது என்பது தான் ராதிகா முதல் ஏகாதிபத்தியதினதும் கொள்கை. அதுதான் பெண்களுக்கு அழகியல் சாதனங்களை ஏற்றுமதி செய்தும், விளம்பரம் செய்தும் பெண்கள் அதைப்பற்றிச் சிந்திக்கவும் கோருகின்றனர்.

பெண்மைக்கான ராதிகாவின் இன்னுமொரு விளக்கம் தருவதைப்பார்ப்போம். "" இரக்க சுபாவம் , சகிப்புத் தன்மை, சமூகஉறவு பேணல், சாந்தம் இது போன்ற குணங்கள் எல்லாம் மனிதர்களுடன் இணைந்து செயற்படும் போது அவர்கள் பாவித்திருக்கிறார்கள். இந்தப் பண்புகள் குணங்கள் எல்லாம் நீண்ட காலமாக பெண்களின் நற்பண்புகளாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டபவை. இவை எல்லா நிலைமைகளிலும் மாறுபடாமையாகத் திகழவேண்டிய முக்கிய பண்புகளாகும்.

இவைக்கு வர்க்கம் கிடையாதா? ஏன் இந்தப் பெண்கள் இரக்கம், சகிப்பு, சமுகஉறவு, சாந்தம் போன்றவற்றை பொதுவில் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு, உயர்சாதிப் பெண்களுக்கு வழுங்கவில்லை. தமிழ் பெண்களுக்கு உயர்சாதிப் பெண்களுக்கு வழுங்கவில்லை. தமிழ் பெ்ணகளுக்கு சிங்களப் பெண்கள் வழுங்கவில்லை. கறுப்பு பெண்களுக்கு வெள்ளையினப் பெண்கள் வழுங்கவில்லை மூன்றாம் உலக நாட்டுப் பெண்களுக்கு மேற்கு நாட்டுப்பெண்கள் வழுங்கவில்லை. ஏன் சொந்த மருமகளுக்கு மாமி வழுங்கவில்லை. இப்படி எத்தனையோ உண்டு.

ஏன் இவைகளை வழுங்க மறுத்து கோட்பாட்டளவிலும் நடைமுறையில் வன்முறை எனவும் இந்தப் பெண்ணின் இந்தப் பண்புகள் மீது கேள்வியே இல்லையா?
இவை ஆண்களால் பெண்க்ள மீது திணிக்கப்பட்டவை ஆண்தேவையைப் பூர்த்தி செய்ய பெண் அடங்கிப் போகவும் பெண்கள் மூலம் சமுக ஒழுங்கை ஏற்படுத்த திணிக்கப் பட்டவையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண் பெண் வேறுபாடு இன்றி பெண் போராடவும் ஆயுதம் ஏந்தி யுத்தம் செய்யவும் கோருவது ஒரு பெண்ணின் அடிப்படை உரிமையாகும். சமுகம் வன்முறையில் உள்ளவரை வன்முறை திணிக்கப்படும் வரை அதற்கு எதிராக வன்முறையைக் கையாளும் உரிமை பெண்களுக்கு அவசியமும் அடிப்படை யுமாகும்.

இது பெண்ணின் இயலபான குணமல்ல. மாறாக வீரம், செயல், ஆற்றல், பரஸ்பர மதிப்பு எனப்பன வற்றை ஆண்பெண் சமத்துவ நிலையில் தேடவேண்டும்.

இவைகளை எல்லா நிலைமைக-ளிலும் மானுட ஆளுமையாகக் காணவேண்டும் என்பது வர்க்க போர் நடக்கும் போது ஒரு முதலாளித்து இரக்கம் , சகிப்பு, சமூகஉறவு, சாந்தப்படி பாதுகாத்து , அதற்கு எதிராக இருக்கக் கோரும் ராதிகாவின் அரசியல் இன்றைய உலக ஒழுங்கைத் தொடர்வது எப்படி என்பதை மையமிட்டுள்ளது.

மேலும் அவர் "" பெண்கள் இராணுவ மயப்படுகின்ற நிலைமை முன்பைவிட அதிக அச்சுறுத்தலான ஒன்றாகும்."" எனக் கூறும் போது சிங்கள இன வாதத்தைப்பாதுகாக் முனைகின்றார். புலிகளின் அரசியல் மக்கள் போராட்டத்திற்குப் பதில் இனப் பிரிவுக-ளின் போராட்டமாக சீரழிந்தபோது அது இனவாத சிங்கள அடிப்படைக்குச் சாதகமாக இருந்தது. இந்நிலையில் புதிய படைப்பிரிவுகளை உருவாக்க பெண்களை வெளியல் புலிகள் கொண்டு வந்தபோது, பெண கள் படைப்பரிவுகள் சிங்கள இனவாதத்திற்கு சவால் விடுகின்றன. இந்தப் பெண்கள் அணிதி ரள்வது என்பது இந்திய துணைக் கண்டத்தின் சமுகக் கட்டமைப்பின் பெண்ணின் அடங்கிப் போகும் போக்கை அதன் அடிப்படை உரிமையை கேள்விக் குள்ளாக்கியுள்ளது.

இது எதிர்காலத்தில் இந்திய சமுகப் பெண்ணின் விழிப்புணர்வுககு ஊன்று கோலாகியுள்ளது. இது எதிர்காலத்தில் ஏகாதிபத்தியத்திற்கும் உள் சுரண்டல் பிரிவுக்கும் விடப்படம் ஒரு சவாலாக எழுந்துள்ளது. சனத்தொகை பாதிப்பிரிவு அடங்கியுள்ளவரை சுரண்டப்படும் வர்க்கம் சாது நிலையை இட்டு அலட்டிக் கொள்ளாப் போவதில்லை. அதை தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கீழ் அணிதிரண்ட பெண்கள் (புலிகளின் நடவடிக்கை பிழையாக இருந்த போதிலும்) இந்திய துணைக் கண்டத்தில் சவாலாக உருவாக்கியுள்ளனர் எதிர்காலத்தில்" இதன் விளைவுகள் தெளிவாகப் பிரதி-பலிக்கும்.

இதையிட்டு அச்சுறுத்துவதாக கூறும் ராதிகா சிங்கள இனவாத அரசு சரி சுரண்டல்பிரிவு சரி சொல்ல வருவது பெண்னே நீ மீளவும் அடுப்படிக்குப் போ. என்றுதான். பெண்வீதிக்கு வந்தால் பயப்படுகின்றார்கள் என்றால் ஆணாதிக்கவாதிகளும் அதைச் சார்பவர்-களுமே.

ஆண் பெண் வேறுபாடு இன்றி பெண் போராடவும் ஆயுதம் ஏந்தி யுத்தம் செய்யவும் கோருவது ஒரு பெண்ணின் அடிப்படை உரிமையாகும். சமுகம் வன்முறையில் உள்ளவரை வன்முறை திணிக்கப்படும் வரை அதற்கு எதிராக வன்முறையைக் கையாளும் உரிமை பெண்களுக்கு அவசியமும் அடிப்படை

www.tamilarangam.net

யுமாகும்.

ஓர் இனம் , ஒருமதம், ஒரு தேசியம் , ஒரு சாதி மீது வன்முறையை ஒரு பிரிவு மக்கள் கூட்டம் கட்டவிழ்தது விடுமாயின் அதை எதிர்த்துப் போராடுவதும் சொந்த சனநாயகத்தை , மனித உரிமையை மீட்கப்போராடுவதும் பெண்ணின் அடிப்படையுரிமையாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பில் பெண்களின் உரிமை நிலை நாட்டப் படுதல், பெண்விடுதலையை அடிப்படை யாகக் கொள்ளாமை என்பன அரசியல் ரீதியில் விமர்சனத்திற் குரியவையே தவிர போராடும் உரிமைமறுத்தலில் மையப்படவில்லை.

ஒரு பெண் ஆணைப்போல் போராடும் சமுக கடமையின் மீது நின்றபடிதான் தனது விடுதலை நோக்கியும் போராட வேண்டும். அதற்கு வெளியில் ஒடுக்கலும் சாத்தியமில்லை. பெண்தனது உரிமையை மீள வென்றெடுக்க போராட சகிப்பு, அமைதி, சாந்தம், சமுகஉறவுக-ளைப் பின்பற்றுதல் ஒடுக்கலும் பெறமு-டியாது. பெண் தனக்காகப் போராடவும் அது வன்முறையை பரிசாக அளிப்பின் தற்காப்புக்கா வன்முறையை முன்னெடுக் கவும் உரிமையை தனதாக கொண்டுதான் பெண்விடுதலையயடைய முடியும். ஏகாதிபத்திய பெண்கள் அமைப்புக்கள் தமது பூர்சுவா கண்டு பிடித்தல்களில் நின்று அமைதி, சாந்தம் பற்றி கூறும் போது எல்லாவித சொற்பதங்களும் உண்மை யில் பெண்களுக்கு எதிரான ஆணாதிக்க சார்பானவை என நாம் புரிந்துநடந்து கொள்ள வேண்டும்.
ராதிகா மேலும்

""இலங்கையை நோக்கினா லும் சரி . முழு உலகை நோக்கினாலும் சரி முழு உலகையும் எடுத்துக் கொண்டாலும் சரி இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனித உரி மைகளை ஈட்டிக் கொள்வதற்கு எதிராகப் பெருந்தடைக்கற்களாக வுள்ளவை மத இன மற்றும் தேசி யவாதத் தத்துவார்த்தங்களுமே. இந்த யதார்த்தநிலையை. . . எதிர்நோக்க விரும்பவில்லை"" என ராதிகா தனது அங்கலாப்பை வெளிப்படுத்துகிறார்.

உலக மனித உரிமைகளுக்கு சவால் விடுபவைகள் இவ்வையா, அல்லது வேறு ஒன்றா, எனப்பார்ப்போம். இன்று மனித உரிமைக்கு சவால்விடுபவை ஏகாதிபத்தியமும் சுரண்டல் அமைப்புமே. அப்படியிருக்க மத, இன தேசியவாத் எப்படி சவாலாக இருக்கமுடியும். மத, இன தேசியவாத எழுச்சி என்பது மனித உரிமைகள் மறுக்கப்படுதல் என்பதிலிருந்தே தோற்றம் பெறுகிறது. வல்லவனின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஒடுக்கப்பட் மக்களின் குரல்கள்தான் மத தேசிய இனவாதமாக வெளிப்படு கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்வன்முறையை நிராகரிப்பதன் மூலம் அந்த மக்கள் ஒடுக்கப்பட்டபடி வாழும் அமைதிதான் மனித உரிமையின் சனநாயகம் என வாதிட முனைகின்றார். அதனது இன்றைய உலகப் பொருளாதார அமைப்பு வடிவை குலைக்க முனையும் போராட்டங்களை தான் மனித உரிமைக்குச்

ஓர் இனம் , ஒருமதம், ஒரு தேசியம் , ஒரு சாதி மீது வன்முறையை ஒரு பிரிவு மக்கள் கூட்டம் கட்டவிழ்தது விடுமாயின் அதை எதிர்த்துப் போராடுவதும் சொந்த சனந-ாயகத்தை , மனித உரிமையை மீட்கப்போராடுவதும் பெண்ணின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சவால்விடுகின்றது என்கிறார்.

ஒரு முதலாளி சுரண்டும் உரிமையையும் , ஒரு தொழிலாயி சுரண்டப்படும் உரிமையையும் ஏற்றுக் கொள்ளும் மனித உரிமைதான் உன்னதமான சனநாயகத்தின் சின்னம் என்கிறார்.
இன்று சிங்கள இனவாதத்தை எதிர்த்துப் போராடுவதுதான் இலங்கையில் மனித உரிமைக்கு சவாலக இருக்கிறது என்கிறார். இப்போது சிங்கள் இனவாதத்தடன் இணைந்து சலுகைகோரிப் பெறுவது தான் தமிழ்பிரிவின் கடமையே ஒழிய எதிர்த்தப் போராடுவது அல்ல என்கிறார். பெரும்பான்மை இனத்தின் வன்முறை ஆதிக்கத்தை எதிர்க்காத தமிழின அமைதிதான் இலங்கையில் மனித உரிமையைப் பேண அடிப்படையாகும் என்கிறார். அதுதான் தமிழ் மக்களுக்கு " சமஷ்டித்தீர்வு" தான் சரி எனவும் கூறுவதன் மூலம் சிங்கள இனவாதத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் அடக்குமுறையின் கோட்பாட்டை அப்படியே எடுத்து தமிழ் மக்களுக்கு சனநாயகம் . சமாதானத்திழன் பெயரால் திணிக்க முனைகின்றாா.

தமிழ்மக்களுக்கு உண்மையான சமாதானம். சனநாயகம் மனித உரிமை என்பது சுயநிர்ணய உரிமையில் தங்கியுள்ளது. சுயநிர்ணயத்தை நிராகரித்த சமஷ்டி என்பது சிங்கள இனவாதத்தற்குட்பட்ட இனவாதத் தீர்வுகளே எம்மீது திணிக்க முயல்வதாகும்.

"" சங்ககால இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்ற இராகவன் ( விமர்சகர்) அவர்கள் கன்னிப் பெண்கள் எதிரியுடன் போர் புரிவதற்கென உண்மையில் ஒருமுறை நீதியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒரு முன் நிகழ்வைக் கூறமுடியுமா? என வினா எழுப்பும்போது இவர் ஒரு பெண்ணிலைவாதியா என்ற கேள்வியே எஞ்சிநிற்கிறது. தொப்பிக்கு ஏற்ற தலையை செய்ய எண்ணிய இவர் உலக மற்றும் தமிழ் மரபையே விபச்சாரம் செய்து ஆணாதிக்ககருத்துக்கு முண்டு கொடுக்கிறார்.



தமிழ்மக்களுக்கு உண்மையான சமாதானம், சனநாயகம் மனித உரிமை என்பது சுயநிர்ணய உரிமையில் தங்கியுள்ளது. சுயநிர்ணயத்தை நிராகரித்த சமஷ்டி என்பது சிங்கள இனவாதத்தற்குட்பட்ட இனவாதத் தீர்வுகளே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போல்போட் ஒடுக்கப்பட்ட மக்களினதும் உலகப்பாட்டாளிவர்க்க போராட்ட வரலாற்றிலும் மா. லெ. மாவோயிஸ்டாக இறுதிவரை போராடிய உறுதி மிக்கத் தலைவர்.

99.9 வீதமான செய்தி அமைப்பு ஏகாதிபத்தியத்தின் மக்கள் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் விடாப்பிடியாகத் தொடர்ச்சியாக போல்போட்டிற்கு எதிரான அவப் பிரச்சாரத்தை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. கம்பூஜிய ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவராக இருந்த போல் பொட் மீது நடத்தப்படும் இச் சேறடிப்பு மூலம் கம்பூஜிய மக்களின் வர்க்கப் போராட்ட வரலாற்றையும் அதன் வீரம் மிக்க போராட்ட வரலாற்றையும் அதன் வீரம் மிக்க போராட்டத்தையும் நசுக்கிவிட முடியும் எனக் கனவு காண்கின்றனர். இந்த வகையில் பாட்டாளிவர்க்க அணிகளும், தமக்கான அணிகளை ஊடுருவி இனம் கண்டு உருவாக்கிய தன் மூலம் கட்சிகளும் உள் முரண்பாட்டை மூட்டிவிட்டனர். இதன் தொடர்ச்சியில் ஏகாதிபத்தியத்தின் நடந்த உட்கட்சி மோதலின் பின் பாட்டானிவர்க்க அணிகள் ஒடுக்கப்பட்டன. இந்நிலையில் போல்போட் உட்பட முன்னணி பாட்டாளி வர்க்க தலைவர்களைக் கைது செய்துள்ள கட்சியின் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ அணிகள் போல்போட்டை அமெரிக்க ஏகாதிபத்திய செய்தி நிறுவனமும் முன் 18 வருடத்தில் பின் நிறுத்தி தமது பிரச்சாரம் செய்கின்றனர்.

ஏகாதிகத்தியம் இந்த துரோகத்தை ஜனநாயகத்துக்கான வெற்றி என அடிக்கடி ஒலிபரப்புவதன் மூலம் கம்பூஜிய மக்களை மேலும் சூறையாட வழிகிடைக்கும் என நம்புகின்றனர்.

போல்போட மீது சர்வதேச விரோதி என்று உலக ஏகாதிபத்தியத்தின் நீதிமன்றம் ஒன்றில் அவதூறு புரியவும் கற்றுள்ளனர். கம்புஜியாவில் போல்போட்டின் பாட்டாளிவர்க்க புரட்சி காலத்தில் மனித உரிமை மீறல் நடந்ததாகக் கூறும் இந்த செய்தி ஊடகங்கள் கூட முரண்பட்ட இடைவெளியில் எண்ணிக்கையில் செய்திகளை தமது கம்யுனிச எதிர்ப்புக்கு ஏற்ப விரும்பியபடி பரப்புகின்றனர்.

கம்புஜியா மீதான நச்சு வாயுக்கள் முதல் எல்லாவிதமான குண்டுகளையும் இலட்சக்கனக்கில் அமெரிக்கா விசி அழித்த மண்ணில் ஆட்சிக்கு வந்த போல்போட்டுக்கு எதிராக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதாரத் தடையை அமெரிக்காவும் ஏகாதிபத்தியங்களும் கடைப்பிடித்தன.

நச்சு வாயு அழிவினால் ஏற்பட்ட தொடர்ச்சியான பக்கவிளைவு நோய் உட்பட மருந்துவ வசதிகளின்றி நோயால் இறந்த மக்கள், மற்றும் அமெரிக்கா உருவாக்கிய யுத்தம், அதன் மூலம் உருவான நகர்புற உதிரி லும்பர்களின் எதிர்புரட்சியின் போது கொல்லப்பட்டகர்கள் எல்லாம் சேர்த்துக் கூட்டிக்கட்டி போல்போட மீது வசைபாடி முத்திரை குத்தி மா. லெ. சிந்தனைக்கு எதிராக கையுயர்த்தியுள்ளனர்.

வர்க்கப் போராட்டம் அதன் போக்கிலும் போல்போட் சில இடத்தில் தவறுகளை இழைத்தபோதும் அவர் மா. லெனி. மாவோஜிஸ சிந்தனையைப் பாதுகாத்து இறுதிவரை உறுதியாகப் போராடிய ஒரு மாபெரும் பாட்டாளி வர்க்கத் தலைவராகும்.

சீரழிடைந்து வரும் ஏகாதிபத்திய முரண்பாடுகள், கம்யுனிஸத்தின் தவிர்க்க முடியாத மிகக் குறைந்தளவு மனித இழப்புக்கும், அமெரிக்காவே காரணம் எனக் கூட குற்றச்சாட்டுக்களை முன் வைக்கின்றனர். கம்பூசியாவில் தேசியத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கு என்ன வேலை? கொள் ளையடிப்பது , சூறையாடுவது அடக்குமுறையைக் கையாள்வது போன்றவையாகும். இதை மேலும் நிறுவிப் பாதுகாக்கத்தான் இன்று எகாதிபத்திய ஒப்பாரிகளும் நீதி விசாரணைகள் என்ற பேரில் சேறடிபபுக்களும் நிகழ்கின்றன.

கம்பூஜிய மக்கள் இந்த நீதிவிசாரணைகளின் பின் பெறப்போவது தேசிய வளங்களினை இழப்பது அடக்குமுறையும் ஒடுக்குமுறையும்தான். குற்றவாளி ஆக்கிரமிப்பாளன் அமெரிக்காவும் பிற ஏகாதிபத்தியங்களுமே. இவர்கள்தான் நிதியின் முன் நிறுத்தப்படவேண்டிய மனித விரோ-திகள்.

உலக நீதி மன்றம் விசாரணை எல்லாம் உலகப் பொலிஸ்படை எல்லாம் கொள்ளைக்காரர்களான ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்காக அமைக்கப்பட்டவையே. அந்த நலன்களின் நின்றுதான் ஏகாதிபத்தியம் மனித உரிமை பற்றி பிரகடனம் செய்கிறது என்பதற்கு நாம் ஏகாதிபத்தியத்தின் வரலாற்றை ப்புரட்டினால் தெரியும்.



Joseph Stalin

ஸ்டாலின் பற்றி பேசியவர்க்ள இன்று போல் பொட்பற்றி பேசத் தொடங்கி விட்டார்கள். மார்க்சிய விரோதிகளும் திரிபுவாதிகளும் இந்த ஏகாதிபத்தியத்தின் செய்தி நிறுவனங்களினூடாக கம்யூனிச எதிர்ப்புக் கோட்பாடுகளை முன்னெடுக்க நாயாக அலைவார்கள். இந்த நாய்களினதும் ஏகாதிபத்திய சதி-களையும் இனங்கண்டு நாம் மா.லெ.மா சிந்தனைகளை . ப் பாதுகாக்க ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர்களையும் அவர்க-ளின் தியாகங்களையும் மதித்து அதை முன்னெடுப்பதும் எமது வரலாற்றுக் கடமையாகும். இவர்கள் மீதான ஏகாதிபத்திய திரிபுவாத அவதூறுகளை உலகப்புரட்சிகர வரலாறு துடைத்து அத்தலைவர்களைப் பாதுகாக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சமரானது கேள்வி-பதில் பகுதி ஒன்றை தொடர்ச்சியாக வெளியிட உத்தேசித்துள்ளது. உங்கள், எங்கள் கேள்விகளை, கேள்விக்கு உட்படுத்தி, எமது சமுதாய அறிவை உயர்த்துவது என்ற அடிப்படையில் வெளிவரும் இப்பகுதிக்கு, உள்கள் கேள்விகளையும் சமர் வெளியிடவும் பதில்தரவும் தயாராகவுள்ளது. நண்பர்களே எழுதி அனுப்புங்கள்.!

---

? மனிதன் ஏன் வறுமையில் வாடுகின்றான்?

உலகில் இன்று 120 கோடி மனிதர்கள், அதாவது 5 பேருக்கு ஒருவக் அடுத்த நேர உணவின்றி கையேந்துகின்றான். இந்த நிலைமை என்பது சனத்தொகை அதிகரிப்போ, உணவின்மையாலோ எழுந்தவையல்ல. அதாவது உலகிலுள்ள மக்கள் அனவருக்கும் உண்மையாகவே இன்று உணவு உள்ளதுடன், மேலதிக உணவும் உள்ளது.

ஆனால் இன்று உணவானது சரியான பகிர்வின்றியும், லாபநோக்கில் பெருமளவு உணவானது திட்டமிட்டு அழிக்கப்படுவதுடன், மிருகங்களுக்கு கொடுக்கப்படுவதுடன், மேட்டுக்குடியின் பணத்திமிரில் பெரும் சேதத்தை உணவு சந்திப்பதுடன், உற்பத்தியை கட்டுப்படுத்தி அழித்தொழிப்பது என மக்கள் பல வழிகளில் உணவின்றி தவிக்கின்றனர்.

அதாவது ஆபிரிக்காவின் பிரதான உணவான சோளம், போதிய உற்பத்தியைக் கொண்டிருந்த போதும், அவை மேற்கு நாட்டு மிருகங்களுக்கு கொடுக்கும் கட்டாயப்படுத்தப்பட்ட ஒப்பந்தம் மூலம் மக்கள் பட்டினியாக்கப்படுகின்றனர். பின்னர் மனிதாபிமான உதவி என்ற பெயரில் அந்த மக்களின் சோளத்தையே மேற்கு நாட்டு சின்னம் பொறித்த சாக்கு மூட்டைகளில் அடைத்து கஞ்சிக்காகவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறந்துகொண்டவர்களின் வாயை நனைக்கவும் கொடுக்கப்படுகிறது.

உணவுப் பங்கீட்டையும், உலகளவில் மக்களின் தேவையானதை அங்கீகரிக்காத வரை, ஏற்றத் - தாழ்வான மனிதவாழ்க்கை உள்ளவரை பசி என்பது ஒரு பகுதி மக்களின் விதியாகவே இருக்கும். இதை மூடி மறைக்க பலவித கட்டுக்கதைகளை வசதியானவன் சொல்லிக்கொண்டிருப்பதும் தொடரும். அதை அறிவியல் துணையுடனும் ஆதாரங்களுடனும் ஒப்பிட்டுப் பார்ப்பது மட்டுமே அறிவாகும்.

## கடவுள் உலகத்தைப் படைத்தாரா?

கடவுள் தான் உலகத்தலைப் படைத்தார் எனவும், மனிதனின் நன்மை தீமைகளை தீர்மானிப்பதும் அவர் ஒருவரே என எல்லா மதங்களும் கூறுகின்றன. இதற்கு எதிராக உயிர்வாழ்தல் மற்றும் நன்மை தீமை என அனைத்தையும் சூழலும், மனித போராட்டங்களும் தான் தீமானித்துவிடுகின்றன.

நாம் இனி அறிவியல் கோணத்திலிருந்து இதை ஆராய்வோம்.

உலகை கடவுள் தான் படைத்தார் என்போர் எப்போது உழைக்கும் ஒரு பிரிவையும், உழைக்காத சுரண்டும் பிரிவையும்: ஒரு தொழிலாளியும் ஒரு முதலாளியும் இருப்பதை கடவுள் வழியாக சித்தரித்து அங்கீகரித்து பாடுபடுகின்றனர்.

உலகை கடவுள் படைக்கவில்லை என்போர் மனிதனின் வேறுபாட்டையும் நீக்கவேண்டும் என்கின்றனர்.

மனிதநேயத்தை தேடின், எல்லா மக்களுக்கும் ஒரே அளவுகோலை யார் கோருகின்றார்களோ அவர்கள் உண்மையைத் தேடுபவர்களாக உள்ளனர்.

கடவுள் உலகை படைத்தார் என்போர் தமது எல்லாக் கோட்பாட்டையும் பூமியில் நின்று, தமது கண்களால் கண்டதைக் கொண்டும் கானாத கற்பனை வாயிலாகவும் உலகைப் படைக்கின்றனர்.
பூமி தட்டையானது எனவே எல்லா மதங்களும் சொல்லுகின்றன. பூமி உருண்டை என்பதை மிக அண்மையில்தான் நிறுவமுடிந்தது. கடவுள் சொன்ன பூமியின் தட்டைக் கோட்பாடு இன்று பொய்யாகிப்போய் உள்ளது அல்லவா? ஆகவே கடவுளும் பொய்யல்லவா?

நாம் எமது மனித வாழ்விலும், எமது தலைமுறையின் வாழ்விலும் பெற்ற, பெறுகின்ற அனைத்துப் பொருட்களும் மனித உழைப்பின் பயன்பாட்டின் விளைவே ஒழிய ஆண்டவனின் படைப்பல்ல. நாம் இன்று 5 நாள் வேரைநேரம், 40 மணித்தியால வேலை நேரம். லீவு, பிரசவ விடுமுறை, தொழில் பாதுகாப்பு, மருத்துவம், என அனைத்துமே உழைக்கும் மனிதனின் போராட்டங்களால் கிடைத்தனவே ஒழிய ஆண்டவனோ முதலாளியோ அருளிவிடவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது பயன்பாட்டுப் பொருட்கள் அனைத்தும் மனிதனின் கண்டுபிடிப்பும், அதன் மீதான உழைப்பின் விளைவுமேயாகும். நெருப்பைக் கண்டுபிடித்தது என்பதும், அதை பாதுகாக்க நடந்த யுத்தம் என்பது எல்லாம் மனிதவாழ்வின் போராட்டங்களே. நெருப்பு இறைவனால் கொடுக்கப்பட்டதல்ல. நெருப்பு எப்படி உண்டானது என்ற அறிவியலின் விளைவே இன்று தீப்பெட்டிகளாக எம்கையில் எள்ளது. அறிவியல்தான் அனைத்தும். அதுவே னைத்தினதும் உண்மையுமாகும்.

**? விரதமும், அதையொட்டிய உயிர்கொல்மை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இந்தியப் பண்பாட்டில் ஒரு காலத்தில் குதிரை இறச்சியை மனிதன் உண்டான். குதிரை இறச்சிக்காக கொல்லப்பட்ட நிலையில், குதிரையின் அழிவைக்கண்ட அன்றைய சமூகம் குதிரை இறச்சி உண்பதை தடைசெய்தனர். இன்று குதிரை இறச்சி சாப்பிடுவது என்பதே ஒரு காட்டுமிராண்டித்தனமாக பார்க்கப்படுகிறது.

ஒன்றின் தடை, செயல்கள் சில சூழல், பண்பாட்டு பழக்கவழக்கத்துடன் தொடர்புடையதே ஒழிய, மனிதனின் ஆதியின் தொடர்ச்சியல்ல. இதுபோன்றே விரதமும் ஆகும். இந்தியாவின் எல்லா ஏழைகளும் நாள்தோறும் விரதம் இருக்கும் வகையில் அவர்கள் பட்டினியில் வாழ்கின்றனர். மேட்டுக்குடி பார்பனன் மேலதிகமாகத் திண்டதனால் ஏற்படும் உடற்பெருக்கைக் கட்டுப்படுத்த உண்ணாமையிருந்தனர் ஒரு பகுதியினர். இதுபோன்றவற்றையே பின்னால் சமயமாக்கி பின் அதற்கென்று விதிவிலக்குகளை உருவாக்கி அதை தமது அடக்கும் வடிவின் சின்னமாக மாற்றினர்.

உயிர்கொல்லாமையை சமனர் என்ற சமயத்தில் இருந்து உள்வாங்கிய பார்பனியம் அதை இந்துமதம் ஆக்கியதன் மூலம் அதை இந்துக்களின் பொதுப்பண்பாடாக்கினர். பார்பனியமும் இந்துவும் உயிர்கொல்லாமையை இன்று கண்களுக்குத் தெரிவதில் இருந்து விலத்தினர். ஆனால் உண்மையில் உயிரானது கண்களுக்கு தெரியாது உள்ளதுடன் சொல்பவனே அதைக் கொன்று புசிக்கின்றான்.

விரதமிருந்தபின் உண்ணும் உணவுடன் தயிரைக்கலந்து உண்ணுகின்றனர். இந்தத் தயிரானது பக்சிரியா என்ற உயிரினத்தால் நிறைந்துள்ளது. இந்த உயிரினத்தை உண்டு, அது செமிபாடடையத் தொடங்கியவுடன் கொன்ற உயிரின் மீது நின்று உயிர் கொல்லான்மை பற்றிப் பேசுபவன் அறிவற்ற மூடன்.

ஒரு நோய் ஏற்படின் அதற்கு மருந்துண்டு நோய்க்குக் காரணமான உயிர்க்கிருமியை உடலுக்குள்ளேயே கொல்லுகின்றனர். நுளம்பு, கரப்பான், எறும்பு, மூட்டைப்பூச்சி..... என எண்ணற்ற பூச்சி வகைகளை உயிர்கொல்லாமையில் இருந்துபாதுகாக்கவில்லை. அதை கூட்டங்கூட்டமாக கொன்றபடியேதான் உயிர்கொல்லாமை, விரதம் பற்றி பேசுகின்றனர் அறிவிலிகள். உண்மை என்பது அறிவின்பாலானதே ஒழிய நம்பிக்கையின் பாலானவை அல்ல. அத்துடன் முட்டாள்களின் பிரச்சாரத்தின் பாலானதுமல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமர்
இதழ்-22
பக்கம்-56
அரசியற் தத்துவார்த்த விமர்சன ஏடு

வெளியீடு:-
தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம்
பிரான்ஸ்

சந்தாவுக்கான அன்பளிப்பு-
ஐரோப்பிய நாடுகள் 6-பிரதிகள்-100 பிராங்
12 பிரதிகள்- 200 பிராங்
ஏனையநாடுகள 12-பிரதிகள்-225 பிராங்

'S A M A R'
ISSUE NO-22
PAGES 56
PUBLISHED BY
TAMIL REFUGEE LITERATURE CENTRE
FRANCE

'S A M A R'
87, RUE DE COLOMBES
92600 ASNIERES SURSEINE
FRANCE.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்